Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 15 2025

வெள்ளிக்கிழமை 15, ஓகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 029 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## தேசிய தாய்ப்பால் மாதம் பிரகடனம்

ஓகஸ்ட் மாதத்தை தேசிய தாய்ப்பால் மாதமாக அறிவிக்க சுகாதார மற்றும் ஊடக அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சிறப்பு மாதத்தைக் குறிக்கும் தேசிய கொண்டாட்டம் மற்றும் ஆலோசனைப் பட்டறை பத்தரமுல்லையில் உள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# “கஞ்சாவை வளர்க்க ஊக்குவிக்கும் அரசு”



தேர்தல் சமயத்தில், வலுச்சக்தி அமைச்சு சார் நடவடிக்கைகளில் இவற்றை இவ்வாறு செய்ய முடியும் அவ்வாறு செய்ய முடியும் என சொன்ன விடயங்களை ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றை அவ்வாறு செய்ய முடியாது என்று தற்போது தெரிவித்து வருகின்றனர் என குற்றஞ்சாட்டியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ரணசிங்க பிரேமதாச 200 ஆடைத் தொழிற்சாலை திட்டத்தை முன்னெடுத்த போது, பிரேமதாச வெள்ளைக்கார பெண்களுக்கு உள்ளாடைகளைத் தைக்கிறார் என்றனர் தற்போது இந்த அரசாங்கம் கஞ்சாவை வளர்க்க ஊக்குவிக்கிறது.

மொனராகலை மாவட்டத்தைச் சார்ந்த இம்முறை புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச சபை உறுப்பினர்களுடன் வியாழக்கிழமை(14) அன்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் மீதான ரூ.50 விசேட பெறுமதி சேர் வரியை நீக்குவதன் மூலம் எரிபொருள் விலையைக் குறைப்பதாக இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிப்போர் கூறியிருந்தனர். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 884 பில்லியன் டொலர்களை தற்போது கடனாக செலுத்த வேண்டி காணப்படுகிறது. ஆகையால் டீசல் மற்றும் பெட்ரோலுக்கு ரூ.50 வரி விதிக்கிறோம் என்று விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அண்மையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “ஏற்ற தாழ்வுகளை நன்கு அறிவேன்”

பொலிஸ் சேவையில் அனைத்து மட்டங்களிலும் பதவிகளை வகித்துள்ளதால், காவல்துறையின் அனைத்து ஏற்ற தாழ்வுகளையும் நன்கு அறிந்தவர் என்று புதிய பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “பொருளாதார மீட்சி வேகமாக முன்னேறுகிறது”



இலங்கையின் பொருளாதார மீட்சி ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட வேகமாக முன்னேறி வருவதாகவும், அடுத்த ஆண்டுக்குள் நாடு நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விஞ்சிவிடும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கூறுகிறார்.

நெருக்கடியின் உச்சத்தில், பொருளாதார சீர்திருத்தங்கள் எதிர்பார்த்ததை விட விரைவாக பெறுபேறுகளைத் தருவதாக வீரசிங்க கூறினார்.

தொடர்ச்சி P2

## 3 மருத்துவமனைகளில் பணிப்பாளர்கள் இல்லை

இலங்கையில் உள்ள மூன்று முக்கிய தேசிய மருத்துவமனைகள் நிரந்தர பணிப்பாளர்கள் இல்லாமல் ஆறு மாதங்களுக்கும் மேலாக இயங்கி வருவதாக சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை மற்றும் காலியில் கராபிட்டிய தேசிய மருத்துவமனை ஆகியவையே பணிப்பாளர்கள் இல்லாமல் இயங்கிவருகின்றன.

தற்போது, கொழும்பில் உள்ள தேசிய மருத்துவமனையை, லேடி ரிட்ஜ்வே குழந்தைகளுக்கான மருத்துவமனையின் பணிப்பாளராக இருக்கும் டாக்டர் பிரதீப் விஜேசிங்கே மேற்பார்வையிட்டு வருகிறார். டாக்டர் விஜேசிங்கே இரு நிறுவனங்களையும் ஒரே நேரத்தில் நிர்வகித்து வருகிறார்.

தொடர்ச்சி P2



## இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினம் இன்று

இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினம் வெள்ளிக்கிழமை (15) கோலாகமாக கொண்டாடப்படவுள்ளது.
புதுடெல்லியில் வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றவுள்ளார். இதற்கான ஒத்திகை, வியாழக்கிழமை (14) அன்று இடம்பெற்றது.

தொடர்ச்சி P2




பாகிஸ்தானின் 79ஆவது சுதந்திர தினம் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பகீம் அல் அஸீஸ் தலைமையில், பாகிஸ்தான் தேசியக் கொடியை ஏற்றி வைத்தலுடன் வியாழக்கிழமை (14) அன்று ஆரம்பமானது.

## சொக்லேட் திருடிய நபர் கொடூரமாக கொலை



சொக்லேட் மீது மோகம் கொண்ட 67 வயது நபர் ஒருவர் கடையில் இருந்து ஒரு சிறிய சொக்லேடை திருடியதாகக் கூறி கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என பேராதனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கடையின் உரிமையாளரும் அவரது ஊழியர்களில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



### திருகோணமலை நிலத்துக்காக

## ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டம்

திருகோணமலையில் விவசாய நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும், அபிவிருத்தி திட்டங்களுக்காக வன நிலங்களை ஆக்கிரமிப்பதற்கும் எதிராக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை முத்துநகர் பகுதியில் உள்ள 600 ஏக்கர் நெல் நிலம் இந்திய நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுவதை நிறுத்தவும், வன நிலங்களை ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்பை வலியுறுத்தியும் போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் பங்கேற்ற மாணவர் செயற்பாட்டாளர்களான வசந்த முதலிகே மற்றும் லஹிரு வீரசேகர ஆகியோர் ஜனாதிபதி செயலகத்திற்கு வெளியே ஒரு மூத்த பொலிஸ் அதிகாரியுடன் சூடான விவாதத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2

## ராஜிதவின் சொத்துக்கள் முடக்கம்?



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தொடர்ந்து தலைமறைவாக இருந்தால் அவரது சொத்துக்களை பறிமுதல் செய்வதில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளதாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில், இலங்கை விமானப்படையினரால் 2006.08.14 அன்று மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 53 மாணவியர்களுக்கும், நான்கு பணியாளர்களுக்குமான 19ஆம் ஆண்டு நினைவேந்தல், படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற வள்ளிபுனம் இடைக்கட்டுப் பகுதி உணர்வெழுச்சியுடன் வியாழக்கிழமை (14) அன்று முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## வாவியில் இருந்து 8,188 தோட்டாக்கள் மீட்பு



அனுராதபுரம், கலென் பிந்துனுவெவ கெடலாவ வாவியில் இருந்து தானியங்கி துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 3000க்கும் மேற்பட்ட தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாக கலென் பிந்துனுவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## பாதாளத்திடம் இலஞ்சம் எஸ்எஸ்பிக்கு விளக்கமறியல்

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் வியாழக்கிழமை (14) கைது செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (SSP) சதீஸ் கமகேயை, ஓகஸ்ட் 19ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திரன, வியாழக்கிழமை (14) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "ஏற்ற தாழ்வுகளை நன்கு அறிவேன்"



இலங்கையின் 47ஆவது பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள பிரியந்த வீரசூரிய, தனது கடமைகளை பொலிஸ் தலைமையகத்தில், வியாழக்கிழமை (14) ஏற்றுக்கொண்டார். அதன்பின்னர் அங்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், பொலிஸ் துறையில் 4 ஆண்டுகள் பொலிஸ் கான்ஸ்டபிளாகவும், 7 ஆண்டுகள் பொலிஸ் விசாரணை அதிகாரியாகவும், 26 ஆண்டுகள் மூத்த அதிகாரியாகவும் பணியாற்றிய நான், இலங்கை காவல்துறையின் ஐஜிபியாக நியமிக்கப்பட்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

என்னை இந்தப் பதவிக்குக் கொண்டுவர நான் மேற்கொண்ட இலவசக் கல்விக்கும், அதற்காகப் பொதுமக்கள் செலவிடும் பணத்திற்கும் எனக்கு ஒரு பொறுப்பும் உள்ளது என்றார்.

பொலிஸ் துறையின் தொலைநோக்குப் பார்வையின்படி, குற்றம் மற்றும் வன்முறை குறித்த எந்த அச்சமும் இல்லாத அமைதியான சூழலை உருவாக்குவதற்கு நான் உட்பட காவல்துறை அதிகாரிகளிடமிருந்து உயர் செயல்திறன் எதிர்பார்க்கிறேன். ஒழுக்கமான காவல்துறையை உருவாக்குவது மிக முக்கியமானதாகக் கருதுகிறேன்.

அத்துடன், 150 ஆண்டுகளாக இருந்து வரும் கௌரவமான காவல் சேவையின் பெருமையை மீட்டெடுக்க எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் செய்கிறோம் என்றும் அவர் கூறினார்.



## இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினம் இன்று

இலங்கையில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், கண்டி உதவி இந்திய உயஸ்தானிகராலயம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதரகத்திலும் இந்திய தேசியக்கொடி ஏற்றப்படும்



## ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டம்

உரையாடலின் போது, இரண்டு வாரங்களுக்கு முன்பு விவாதிக்கப்பட்ட பிரச்சினைக்கு அதிகாரிகள் தீர்வு காணத் தவறியதால் போராட்டம் நடத்தப்படுவதாக வசந்த முதலிகே கூறினார்.

"இன்று எங்களுக்கு பதில் தேவை. நீங்கள் எங்களிடம் பொய் சொல்ல முடியாது. இன்று ஜனாதிபதியின் செயலாளருடன் எங்களுக்கு ஒரு கலந்துரையாடல் தேவை. ஜனாதிபதி முன்னர் பேச்சுவார்த்தைகளுக்கான திகதியை உறுதியளித்திருந்தார். நிலைமை தாங்க முடியாத கட்டத்தை எட்டியதால் நாங்கள் இன்று வந்துள்ளோம்," என்று முதலிகே பொலிஸ் அதிகாரியிடம் கூறினார்.

# "கஞ்சாவை வளர்க்க ஊக்குவிக்கும் அரசு"

துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் அதே விலையில் எரிபொருளை மக்களுக்குப் பெற்றுத் தருவோம் என்று தேர்தல் காலங்களில் ஆளும் தரப்பினர் பிரஸ்தாபித்தனர். ஆனால் தெளிவான அதிகாரத்தை வைத்து கொண்டும் அரசாங்கத்தால் இதுவரையில் எதனையுமே செய்ய முடியாது போயுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.


ரணசிங்க பிரேமதாச 200 ஆடைத் தொழிற்சாலை திட்டத்தை முன்னெடுத்த போது, பிரேமதாச வெள்ளைக்கார பெண்களுக்கு உள்ளாடைகளைத் தைக்கிறார் என்று தற்போதைய ஆளும் தரப்பின் அப்போதைய தலைவர்கள் விமர்சனங்களை முன்வைத்தனர். இன்று, இந்த ஆளும் தரப்பினர் 7 வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கஞ்சா செய்கையில் ஈடுபட சட்ட ரீதியான அனுமதிகளை வழங்கியுள்ளனர். அன்று ஆடைத் தொழில் உற்பத்தி தொழிலாக மேம்படுத்தப்பட்டது. இன்று 7 திட்டங்களின் கீழ் 64 ஏக்கர் கஞ்சா செய்கைக்காக சட்டபூர்வ ரீதியாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தற்போது விவசாயிகள் கைவிடப்பட்டுள்ளனர். தங்கள் சொத்துக்களை அடமானம் வைத்து விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தனர். இறுதியில் அவர்களின் பயிர் அறுவடைகளுக்கு நியாயமான விலை கிடைத்தபாடில்லை. அரசாங்கம் பெற்றுக் கொடுத்தபாடுமில்லை. தற்சமயம் வெலிமடை, ஊவா பரணகம பகுதிகளில் உருளைக்கிழங்கு விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களின் உற்பத்திகளுக்கு நிலையான விலைகள் கிடைத்தபாடில்லை.

மொனராகலை பிரதேசத்தில் காணப்படும் பெல்வத்த செவனகல சீனி உற்பத்தி தொழிற்சாலைகள் நிதி நெருக்கடியை எதிர்கொண்டு, சரிவைச் சந்தித்து வருகின்றன. இது தான் இந்த அரசாங்கத்தால் இந்நாட்டில் கொண்டு வரப்பட்ட முறைமை மாற்றம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மேற்கொள்ளப்படும் சிசேரியன் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் கடுமையான சிக்கல்கள் எழுந்துள்ளன. மயக்க மருந்து, மயக்க மருந்து பயன்பாட்டிற்குப் பின்னர் தேவையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றன. ஆட்சிக்கு வரும்போது மருந்துப் பற்றாக்குறைக்கு நிலையான தீர்வுகளைப் பெற்றுத் தருவோம் என இந்த அரசாங்கம் கூறினாலும், இன்று இலவச சுகாதாரப் பராமரிப்பும் கல்வியும் வீழ்ச்சி கண்டு வருகின்றன. இதுபோன்ற சூழ்நிலைக்கு மத்தியில், நாட்டு மக்களுடன் நாம் ஒன்று சேர்ந்து கொண்டு, அவர்களின் எண்ணங்களையும் விருப்பங்களையும் புரிந்துகொண்டு, மக்களுக்கு நம்மால் முடிந்த சிறந்த சேவைகளைச் செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# "பொருளாதார மீட்சி வேகமாக முன்னேறுகிறது"



"ஒரு நாடு ஒரு நெருக்கடியால் பாதிக்கப்பட்டவுடன், உற்பத்தி இழப்பை மீட்டெடுக்க அதே நிலைக்குத் திரும்ப நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும். எங்கள் விஷயத்தில், மூன்று ஆண்டுகளுக்குள், நாங்கள் கிட்டத்தட்ட அங்கு சென்றுவிட்டோம்," என்று அவர் கூறினார்.

அடுத்த ஆண்டுக்குள், வேலைவாய்ப்பு, வறுமைக் குறைப்பு, வருமானம் மற்றும் வாழ்க்கைச் செலவு போன்ற முக்கிய துறைகளில் இலங்கை நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விட சிறப்பாக இருக்கும் என்று ஆளுநர் நம்பிக்கை தெரிவித்தார்.

"அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் வருமானம், வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடத்தக்கதாக இருக்கும். அதாவது, அடுத்த மூன்று முதல் ஐந்து ஆண்டுகளில், நாம் முன்பு இருந்த நிலையை அடைய முடியும்," என்று அவர் மேலும் கூறினார்.

# வாவியில் இருந்து 8,188 தோட்டாக்கள் மீட்பு



வயலில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த ஒரு விவசாயி ஒருவர் தனது கால்களை கழுவுவதற்காக குறித்த வாவிக்கு சென்றபோது நீருக்குள் பல தோட்டாக்கள் இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

அதற்கமைய உடனடியாகச் செயற்பட்ட பொலிஸார் குறித்த வாவிக்கு சென்று மேற்கொண்ட தேடுதலில் 5,038 தோட்டாக்களை மீட்டுள்ளனர்.

குறித்த இடத்தில் விசேட பொலிஸ் குழுவினரால் மேற்கொண்ட மேலதிக சோதனையின்போது, 11 மெகசின்கள் மற்றும் 3,150 தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சொக்லேட் திருடிய நபர் கொடூரமாக கொலை

இவ்வாறு கொலை செய்யப்பட்ட நபர், பேராதனையில் உள்ள ஈரியகம பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும், தனது பிள்ளைகள் திருமணம் முடித்துக்கொண்டு வேறு பகுதிகளில் குடியேறிய பிறகு அவர் தனது மனைவியுடன் வசித்து வருகிறார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிக்கப்படுகின்றது.

சம்பவத்தன்று குறித்த நபர் உணவுப் பொருட்கள் வாங்குவதற்கு கடைக்குச் சென்றுள்ளார். அங்கு கடையின் உரிமையாளரும் அவரது ஊழியரும் அவரை கடைக்குள் இழுத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

ஏனெனில், அவர் அதற்கு முன்தினம் கடையில் சொக்லேட்டுகளை திருடும் காட்சி சி.சி.ரி.வி. கெமராவில் பதிவாகி இருந்துள்ளது.

முதியவரிடம் சொக்லேட் வாங்கும் அளவிற்கு பணம் இல்லாமையால் சொக்லேட் பிரியரான அவர் திருடியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

அவர் வழமையாக கடைக்குச் செல்லும் போது, தனக்கும் தன்னுடைய மனைவிக்கும் சொக்லேட்கள் வாங்கி வரும் பழக்கம் இருந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான முதியவரை கடை மூடும் நேரம் வரை உள்ளே வைத்திருந்து சந்தேகநபர்கள் வீதியில் விட்டுச் சென்றுள்ளனர்.

அவ் வழியூடாக சென்ற பெண்ணொருவர் அவரை அடையாளம் கண்டு ஆபத்தான நிலையில் இருந்த அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார். மரணப்படுக்கையில் இருந்த முதியவர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், இவ்விருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பேராதனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜித விஜேகோனின் அறிவுறுத்தலின் பேரில், குற்றப்பிரிவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சஞ்சீவ மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.



## தேசிய தாய்ப்பால் மாதம் பிரகடனம்

சர்வதேச தாய்ப்பால் வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 முதல் 7 வரை பிரகடனப்படுத்தப்படுகிறது. மேலும், இந்த மாதத்தை அந்த வாரத்துடன் இணைந்து அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தாய்ப்பால் கொடுப்பதன் முக்கியத்துவம், அந்த மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், அறிவுப் பகிர்வு, கடந்த ஆண்டில் செய்யப்பட்ட பணிகள் குறித்த விவாதங்கள், தாய்ப்பால் கொடுப்பதன் பத்து கோட்பாடுகள் தொடர்பாக தங்கள் கடமைகளை வெற்றிகரமாகச் செய்த சுகாதார நிபுணர்களைப் பாராட்டுதல் மற்றும் பல திட்டங்கள் ஆகியவை தேசிய கொண்டாட்டம் மற்றும் ஆலோசனைப் பட்டறையில் அடங்கும்.

இந்த நிகழ்வில் பேசிய சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ, தாய்ப்பால் கொடுப்பது குழந்தை மற்றும் தாய் இருவரின் ஆரோக்கியத்திற்கும் மிகவும் முக்கியமானது என்றும், தாய்ப்பால் கொடுப்பது குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலான உணர்ச்சி பிணைப்பை மேலும் வலுப்படுத்த உதவுகிறது என்றும் வலியுறுத்தினார்.

தாய்ப்பால் குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஆன்டிபாடிகளை வழங்குகிறது, இது அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி பல்வேறு குறுகிய கால மற்றும் நீண்டகால நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## 3 மருத்துவமனைகளில் பணிப்பாளர்கள் இல்லை

பிரதி பணிப்பாளர் நாயகம் (டிடிஜி) பதவிகளுக்கான நேர்காணல்கள் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று சுகாதார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும், சீரான நிர்வாகத்தை உறுதி செய்வதற்காக மருத்துவமனை பணிப்பாளர்கள் முன்னதாகவே நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

## செஞ்சோலைப் படுகொலையின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்



குறித்த அஞ்சலி நிகழ்வுகளில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.

அந்தவகையில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முப்புரம் வட்டார உறுப்பினர் சிவபாதம் குகநேசன் மற்றும் வள்ளிபுனம் பகுதி இளைஞர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில், சுடரேற்றப்பட்டு, மலர் தூவி உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாதாளத்திடம் இலஞ்சம் எஸ்எஸ்பிக்கு விளக்கமறியல்

பாதாள கும்பல் தலைவர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்களிடமிருந்து ரூபாய் 100 மில்லியனுக்கும் அதிகமாக இலஞ்சம் பெற்றதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஸ் கமகே மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளில் இருந்து இந்த நிதி அவரது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிலும், அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களின் கணக்குகளிலும் வைப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

## ராஜிதவின் சொத்துக்கள் முடக்கம்?

இது தொடர்பாக நீதிமன்ற உத்தரவு பெறப்பட உள்ளதாகத் தெரிகிறது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இருந்த பல இடங்களில் அவரைக் கைது செய்ய சமீபத்திய நாட்களில் சோதனை நடத்தப்பட்டாலும், அவரைக் கைது செய்ய முடியவில்லை.

ராஜித சேனாரத்னவைக் கைது செய்ய நீதிமன்றத்தால் சமீபத்தில் ஒரு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

முன்னதாக, முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனைக் கைது செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது, அவர் தொடர்ந்து தலைமறைவாக இருந்ததால் அவரது சொத்துக்களும் பறிமுதல் செய்யத் தயாரானபோது அவர் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

# பாகிஸ்தானின் 79ஆவது சுதந்திர தினம்...



பாகிஸ்தானின் 79ஆவது சுதந்திர தினத்தையொட்டி, வியாழக்கிழமை (14) காலை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பகீம் அல் அஸீஸ் தலைமையில் பாகிஸ்தான் தேசியக் கொடி ஏற்றி வைக்கும் வைபவம் நடைபெற்றது.
இதில், பிரதி சபாநாயகர் டாக்டர் றிஸ்வி சாலி, உயர் நீதிமன்ற நீதியரசர் எம்.ரீ.எம்.நவாஸ், முன்னாள் ஆளுநர் அசாத் சாலி முன்னாள் உயர்ஸ்தானிகர் சட்டத்தரணி என்.எம்.சஹீட் உட்பட பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.
பாகிஸ்தான் முதல் செயலாளர் பாகிஸ்தான் ஜனாதிபதி, பிரதமர் சுதந்திர செய்திகளை வாசித்தார். அத்துடன், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் ஓய்வு பகீம் அல் அசீஸ், இலங்கை பாகிஸ்தான் நட்புறவு இராணுவ, கல்வி புலமைப்பரிசில்கள் ஏற்றுமதி, இறக்குமதி துறையில் இலங்கையின் கடந்த 8 தசாப்த காலங்கள் இணைந்து செயற்படுவதாகவும் மற்றும் இந்தியா காஷ்மீர் பிரச்சினை சார்பாக இந்தியா ஒரு தலைப்பட்சமாக செயல்படுவதாகவும் காஷ்மீர் பிரச்சினை நீண்ட காலப் பிரச்சினையாக நிலவி வருவதாகவும் இந்தியா அண்மையில் பாகிஸ்தான் தாக்குதல் மேற்கொண்டதாகவும் உரையாற்றினார்.





















## பிரதமருக்கு தவறான தகவல்களை வழங்கிய

# அதிகாரிகள் மீது ஒழுக்காற்று

'சுப்ரீம் சாட்' செயற்கைக்கோள் திட்டம் தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு வழங்கப்பட்ட தவறான தகவல்கள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக வர்த்தக வாணிப அமைச்சர் வசந்த சமரசிங்க கூறுகிறார்.

'சிச்சியின் ரொக்கெட்' என்று பொதுவாக அழைக்கப்படும் இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம், ஈட்டிய வருமானத்தை பிரதமர் ஹரிணி அமரசூரிய சமீபத்தில் பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

பின்னர் அமைச்சர் சமரசிங்க புள்ளிவிபரங்களை சரிசெய்து பிரதமருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என்று கூறினார்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் பேசிய



அமைச்சர் சமரசிங்க, பிரதமருக்கு தவறான தரவுகளை வழங்கிய அதிகாரிகள் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

மேலும், பாராளுமன்றத்தில் தகவல்களை வெளியிடுமாறு பிரதமர் கோரும்போது, துல்லியமான தகவல்களை வழங்குவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பொறுப்பாகும். இருப்பினும், இந்த பிழை காரணமாக, இந்த விஷயம் முன்னுக்கு வந்துள்ளது. பொதுமக்களுக்கு துல்லியமான தகவல்களை வழங்குவதற்கான அறிக்கையையும் நான் வெளியிட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

பின்னர், இந்த விடயத்தை நாங்கள் மேலும் ஆராய்ந்து சரியான புள்ளிவிவரங்களை வழங்கினோம். இந்த பிழை திட்டம் தொடர்பான பல சிக்கல்களை எழுப்பியுள்ளது. முன்னர் மறைக்கப்பட்ட சில உண்மைகள் எதிர்காலத்தில் வெளிச்சத்திற்கு வரும் என்று நான் நினைக்கிறேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

# 4 தசாப்தங்களுக்குப் பின்னர் புனரமைக்கப்படும் பாராளுமன்றம்

நான்கு தசாப்தங்களுக்கு பிறகு, இலங்கை பாராளுமன்றத்தில் பெரிய அளவிலான புனரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

42 ஆண்டுகளுக்கு மேலான காலத்திற்குப் பிறகு, இலங்கை பாராளுமன்ற வளாகத்தில் புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருவதாகப் பாராளுமன்ற அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை ஒப்புதலின் பேரிலும், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் அறிவுறுத்தலின் பேரிலும் இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி, பாராளுமன்ற வளாகத்தின் கொன்கிரீட் கூரை மொட்டை மாடியில் உள்ள மண் அடுக்கை அகற்றி பழுது பார்க்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கூடுதலாக, கூரை வடிகால்கள், செப்பு கதவு, பாராளுமன்ற மருத்துவ மையம், கழிப்பறைகள் மற்றும் உறுப்பினர்களின் உடை மாற்றும் அறை ஆகியவற்றில் புதுப்பித்தல்



பணிகள் நடைபெற்று வருகின்றன.

முன்னதாக, பாராளுமன்ற வளாகத்தின் சிறிய பராமரிப்புப் பணிகள் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்பட்டன.

இருப்பினும், பெரிய அளவிலான புதுப்பித்தல் பணிகள் இலங்கை இராணுவத்தின் தொழிலாளர் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன.

# புதிய கட்டிடம் மக்கள் பாவனைக்கு



■ எம்.கிருஸ்ணா

வட்டவளை மருத்துவமனையில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை பொதுமக்களின் பாவனைக்கு புதன்கிழமை (13) அன்று திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார அமைச்சின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஆஸிஸ் அபிவிருத்தி வங்கியின் 86.8 மில்லியன் நிதியுதவியுடன் இக் கட்டிடம் நிர்மானிக்கப்பட்டது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான மஞ்சுள சுரவீர, அம்பகமுவ பிரதேச சபை தலைவர் கபில நாகந்தல, ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள், வட்டளை வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், வட்டவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுன்னாகத்தில் திருடியவர் ஊர்காவற்றுறையில் கைது

■ நிதர்ஷன் வினோத்

சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதி மிக்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் வியாழக்கிழமை (14) அன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஸ்தாபசு ஹரிதாஸ் தலைமையிலான ஊர்காவற்றுறை பொலிஸ் அணியினர் பகல் வீதி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒருவர் நடமாடுவதை அவதானித்து அவரை மறித்து சோதித்த போது அவரது காற்சட்டை பொக்கற்றில்



தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள், பென்ரன்கள், இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதையடுத்து, அவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது அவை சுன்னாகம் பகுதியில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் என தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டபோது அங்கு பல நவீன கைத்தொலைபேசிகள், ஒரு தொகைப் பணம் இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், இச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரால், சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து குறித்த சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பெறுமதிமிக்க பொருட்களையும் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தாய்லாந்தில் இருந்து வந்த 'குஷ்'

தாய்லாந்தில் இருந்து நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட சுமார் 40 மில்லியன் ரூபாய் பெறுமதியான 'குஷ்' போதைப்பொருளை கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம் கைப்பற்றியுள்ளது.

பேலியகொட, நுகே வீதியில் உள்ள துறைமுக கொள்கலன் முற்றத்தில் உள்ள ஒரு கொள்கலனில் குளிரூட்டி சாதனத்திற்குள் மறைத்து வைத்து 6 கிலோ கிராம் 'குஷ்' போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாக மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் கமல்



ஆரியவன்ச தெரிவித்துள்ளார். இந்த 'குஷ்' போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



# ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா

கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா ஆலயத்தில் இம்மாதம் 16ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா வெகு விமரிசையாகவும், பக்தி பூர்வமாகவும் கொண்டாடப்படும்.

உலகெங்குமுள்ள கிருஷ்ண பக்தர்கள் அன்றைய தினம் காலை முதல் விரதமிருந்து விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்வர்.

கிருஷ்ண ஜெயந்தி தினமானது பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அவதார தினத்தைக் குறிக்கிறது.

கிருஷ்ண ஜெயந்தியை அனுஷ்டிப்பதன் மூலம் 7 பிறவிகளில் செய்த பாவங்களிலிருந்து விடுபடுவதாக வேதங்கள் கூறுகின்றன. கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ணா ஆலயத்தில் இந்த விழா வருடாந்தம் வெகு விமரிசையாகவும், பக்தி பூர்வமாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

அன்றைய தினம் அதிகாலை 5.30 மணிக்கு மங்கள ஆராத்தியுடன் விழா ஆரம்பமாகும். தொடர்ந்து பூஜை, பஜனை, குழந்தை கிருஷ்ணருக்கு வலம்புரிச் சங்கினால் விசேட அபிஷேகம், ஆராதனை மற்றும் குழந்தை கிருஷ்ணரைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டல் என்பன இடம்பெறும்.

மாலை ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு மகா அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட ஆராதனைகளும் நடைபெற்று பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கப்படும்.

அபிஷேகத்துக்குத் தேவையான பால், இளநீர் பழம், பூக்கள் மற்றும் அன்னதானத்திற்கு வேண்டிய பொருட்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

மறுநாள் 17ஆம் திகதி ஞாயிறு நண்பகல் 12.00 மணிக்கு சர்வதேச கிருஷ்ண பக்தி கழக ஸ்தாபகரும் ஆன்மிகக் குருவுமான அருட்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்களின் வியாச பூஜை நடைபெறும்.

# இரண்டு முச்சக்கர வண்டிகள் மோதுண்டு விபத்து


ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை பகுதியில் இரண்டு முச்சக்கரவண்டிகள் வியாழக்கிழமை (14) மதியம் மோதி விபத்துக்குள்ளானதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டகையிலிருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த இரண்டு முச்சக்கர வண்டிகளில் ஒரு முச்சக்கர வண்டியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அதை தள்ளிக்கொண்டு சென்று வளைவொன்றில் திருப்ப முற்பட்ட போது இரண்டு வண்டிகளும் மோதி இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள, பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# வழிமுறைகளை வகுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்

இலவசக் கல்வி மற்றும் பொது வரிப் பணத்தின் உதவியுடன் கல்வியைக் கற்று, வெளிநாடுகளுக்குச் சேவை செய்யச் சென்ற நிபுணர்கள் இந்த நாட்டிற்குத் திரும்பாதது ஒரு சோகம். இங்குள்ள முக்கிய கேள்வி என்னவென்றால், அவர்களுக்கு இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சேவை செய்யத் தார்மீக உரிமை உள்ளதா என்பதுதான்.

இலங்கை கல்வித் துறையில் ஒரு மருத்துவரை உருவாக்க இந்த நாட்டு மக்களின் வரிப் பணத்திலிருந்து சுமார் நான்கு மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகக் கூறப்படுகிறது. அதேபோல், ஒரு சிறப்பு மருத்துவரை உருவாக்க அரசாங்கம் 10 மில்லியன் ரூபாய் செலவிடுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 மற்றும் 2024க்கு இடையில் 1,489 சிறப்பு மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர், இதனால் அரசாங்கத்திற்கு 1,250 மில்லியன் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

மருத்துவக் கல்வி பயிலும் ஒருவருக்கு இலங்கை மக்களின் சுகாதார நலனுக்காக பணியாற்றத் தார்மீக உரிமை உண்டு. சிறப்புப் பயிற்சிக்காக வெளிநாடு சென்ற மருத்துவர்கள் நாட்டிற்குத் திரும்புவதை உறுதி செய்யும் வகையில் முறையான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இது மருத்துவர்களுக்கு மட்டுமல்ல, செவிலியர்கள் உட்பட சுகாதாரத் துறையில் உள்ள மற்றவர்களுக்கும் பொருந்தும் ஒரு விஷயம். சுகாதாரப் பணியாளர்களின் இடம்பெயர்வு நமது நாட்டிற்கு ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது, எனவே, உலகளவில் சுகாதாரத் துறையைப் பாதிக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சுகாதார நிபுணர்களை உருவாக்குவதற்காக அரசு செய்த முதலீடுகளில் இலங்கை நிதி இழப்புகளைச் சந்தித்திருந்தால், அதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்காக செய்ய வேண்டிய முதன்மையான பணி, உலக சுகாதார அமைப்பின் சுகாதாரப் பணியாளர்களுக்கான சர்வதேச ஆட்சேர்ப்புக் குறியீட்டைத் திறம்பட மற்றும் வலுவாக செயல்படுத்துவதாகும்.

இலங்கையில் உள்ள அனைத்து மருத்துவ பீடங்களிலிருந்தும் கிட்டத்தட்ட 2,000 மருத்துவ மாணவர்கள் ஒவ்வோர் ஆண்டும் இந்த நாட்டில் மருத்துவத் துறையில் இணைகிறார்கள் என்றாலும், சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ள காலியிடங்களை நிரப்புவது சாத்தியமில்லை. அத்தகைய சூழ்நிலையில், அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட சுகாதார நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறினால், அதுவும் ஒரு கடுமையான பிரச்சினையாகும். அங்கீகரிக்கப்பட்ட சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கை குறித்து ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட முன்னறிவிப்பு செய்யப்பட வேண்டும், மேலும் அவர்களை இலங்கையில் தக்கவைக்க ஒரு நிரந்தர திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

உலகில் எங்கும் சுகாதார நிபுணர்களை அங்கீகரிப்பதும் அவர்களின் சம்பளமும் அவர்களிடையே ஓர் அடிப்படை காரணியாக இருப்பது தவிர்க்க முடியாத உண்மை. எனவே, சம்பள காரணியின் அடிப்படையில் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்பதை அடையாளம் காணலாம். சுகாதார நிபுணர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைத்து நியாயமான தொழில்முறை சூழலை உருவாக்குவதும் அவசியம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வாய்மையுடன் வாழும் முறைமையினைச் சின்ன வயதிலேயே பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும். உண்மையை மட்டுமே பேச வேண்டும். எவர் சொல்லும் பொய்களையும் நம்பக்கூடாது. தெளிவுடன் பேச வேண்டும். எனச் சொல்லி வளர்த்தால் எல்லா இளம் தலைமுறைகளும் நல்லபடியாக, நற்பிரஜைகளாக; உயர்வடைவர்.
சில பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னிலையில் பேசக்கூடாதவைகளைப் பேசுவதுண்டு. எக்காரணம் கொண்டும் பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வதுகூட மகா பாவம். ஒருவரை ஏமாற்றுவது தன்னைத்தான் ஏமாற்றுவது போலவானது.
உள்ளதை, உள்ளபடி பேசத் துணிச்சல் வேண்டும். ஆனால், ஒருவர் பற்றிய நம்பிக்கை, விசுவாசம் ஏற்பட்டால் அவர்களின் கூற்றுக்களை ஏற்க யாவரும் முன் வருவார்கள். எனவே, நெஞ்சத்தூய்மையுடன் சத்திய வழியில் நடப்பதே வீரமுமாகும். வாய்மையே வாழ்வின் மேன்மை.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பேருந்துகள் இல்லாததால் பயணிகள் பெரும் சிரமம்

டயகமவில் இருந்து மெராயா டெஸ்போட் வழியாக காலையில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் இல்லாததால் பயணிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

டயகம நகரில் இருந்து காலை 5.30 மணிக்கு புறப்படும் நுவரெலியா அரச பேருந்து நிலையத்திற்கு சொந்தமான பேருந்து மற்றும் ஹட்டன் அரச பேருந்து நிலையத்திற்கு சொந்தமான காலை 6.00 மணிக்கு புறப்படும் பேருந்து, சேவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் டயகம, அக்கரபத்தனை, மெராயா பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் உட்பட நுவரெலியா நகரத்தை அண்டிய பகுதிகளில் பணிபுரிபவர்களும் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த பேருந்து சேவையில் இல்லாவிட்டால் அடுத்து வரும் தனியார் பேருந்தில் நோயாளர்கள்,தாய்மார்கள் உடன் அதிக நெரிசலில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– செ.தி.பெருமாள்





தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை –33

# பசுமைப் புரட்சி: விவசாயக் கொள்கைகளின் அநீதி

1966-70 காலகட்டத்தின் விவசாயக் கொள்கைகள், தொழில்நுட்பக் கட்டுப்பாடுகளை நீக்கி, நிதி உதவி வழங்குவதன் மூலம் பாரம்பரிய விவசாயத்தின் நவீனமயமாக்கல் என்று அழைக்கப்படுவதற்கு மட்டுப்படுத்தப்பட்டன. இந்தக் கொள்கைகளின் அடிப்படையான மேற்சொன்ன இரண்டு அம்சங்களும் அப்போதைய நிறுவன காரணிகளின் சூழலில் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நில உரிமை முறையின் சீர்திருத்தம் மற்றும் பயனுள்ள விவசாயிகள் அமைப்புகளை நிறுவுதல் ஆகியவற்றுடன் இணைந்ததாக இல்லாவிட்டால், இந்த அணுகுமுறை தடுமாறும் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவில்லை. தொழில்நுட்ப நவீனமயமாக்கலின் இந்த அரைகுறை அணுகுமுறை பெற்ற எந்தவொரு வெற்றியும் குறுகிய காலத்திற்குரியதானது என்பது விரைவிலேயே புலப்பட்டது. இது இந்தக் காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஆரம்ப உற்பத்தி வருமானங்கள் விரைவாகக் குறைந்து வருவதன் மூலம் நிரூபிக்கப்பட்டது. உண்மையில், அடிப்படை நிறுவன சீர்திருத்தங்கள் வெகுஜன அடிப்படையில் வெற்றிகரமான தொழில்நுட்ப நவீனமயமாக்கலுக்கு ஒரு முன்நிபந்தனையாகும். இல்லையெனில், இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸில் நடந்தது போல், புதிய தொழில்நுட்பத்தின் பரவலில் உள்ள வெவ்வேறு விகிதங்களின் விளைவாக, பணக்கார விவசாயிகள் பெரும் பணக்காரர்களாக மாறுவார்கள், ஏழை விவசாயிகள் இன்னும் ஏழைகளாக மாறுவார்கள்.

இலங்கையில் நெல் உற்பத்தியைப் பெரிதும் தடைசெய்த மற்றொரு காரணி, பழமையான நில உடமை முறை. 1946ஆம் ஆண்டில், 60% நெல் நிலங்கள் உரிமையாளர்களால் பயிரிடப்பட்டன, மீதமுள்ளவை ஏதேனும் ஒரு வகையான குத்தகையின் கீழ் இருந்தன. நில உடமை முறையின் முக்கிய வடிவம் ஆண்டே முறையாகும். இம்முறையில், நிலத்திலிருந்து வரும் விளைச்சலில் பாதி ஆண்டுதோறும் வரியாக செலுத்தப்பட வேண்டும். இம்முறையில் பயிரிடப்பட்ட நிலங்கள் 1946 இல் 215,000 ஏக்கர் அல்லது மொத்த நெல் பரப்பளவில் 26% பரப்பளவைக் கொண்டிருந்தது. தட்டாமரு கூட்டு உரிமை முறை (கூட்டுச் சொந்தமான நெல் நிலம், இங்கு ஒவ்வொரு உரிமையாளரும் முழுப் பகுதியையும் ஆண்டுதோறும் மாறி மாறி பயிரிடுவார்கள்) 52,000 ஏக்கர்களை (6.8%) உள்ளடக்கியது. கட்டிமாரு (கூட்டுச் சொந்தமான நிலம், இதில் நிலம் பரம்பரை பரம்பரையாக வாரிசுகளுக்குப் பிரிக்கப்படுகிறது, மேலும் ஒவ்வொரு வாரிசும் சுழற்சி முறையில் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பயிரிடுகிறார்கள்) போன்ற பிற கூட்டு உரிமை முறைகளும், கரு-அண்டே போன்ற குத்தகை முறைகளும் மீதமுள்ள 7.2% நிலத்திற்கு பொறுப்பேற்றன. 1962 அளவில் நிலைமை ஓரளவு மாறியது. 282,000 ஏக்கர், அல்லது மொத்த நெல் நிலங்களில் சுமார் 29%, நில உடமையின் கீழ் இருந்தன, இதில் சுமார் 350,000 குத்தகைதாரர்கள் (அனைத்து விவசாயிகளில் 30%) உள்ளனர். எனவே, மிகவும் பழமைவாத மதிப்பீட்டின்படி, மொத்த நெல் பரப்பளவில் குறைந்தது 35% குத்தகை நிலைமைகளின் கீழ் பயிரிடப்பட்டது, இதில் விவசாயிகள் உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலோ அல்லது நிலத்தில் மூலதன மேம்பாடுகளைச் செய்வதிலோ எந்த ஆர்வமும் கொண்டிருக்கவில்லை.

பொதுவாக, ஆண்டி நில உரிமையாளர் முறையின் கீழ், குத்தகைதாரர் விளைச்சலில் பாதியை நில உரிமையாளருக்கு வாடகையாகக் கொடுத்தார். நாட்டின் தென்பகுதியில் வழக்கமான பங்கு கால் பங்காக இருந்தது. சில நில உரிமையாளர்கள் விதை நெல் அல்லது உரத்தை ஈடாகக் கொடுத்தனர், சில சமயங்களில் உழுவதற்கு எருமை மாடுகளையும் கொடுத்தனர். ஆண்டி முறையின் மிகவும் பிற்போக்குத்தனமான அம்சங்கள், குத்தகைதாரரை முதலில் குத்தகை பெறுவதற்கு நில உரிமையாளருக்கு மதரன் எனப்படும் முன்கூட்டிய கட்டணத்தை வழங்க வேண்டியிருந்தது, மேலும் வருடாந்திர புதுப்பித்தலை உறுதி செய்வதற்காக நில உரிமையாளரை மகிழ்விக்க அனைத்து வகையான அரை-சேவை சேவைகளையும் செய்ய வேண்டியிருந்தது.

தட்டாமரு மற்றும் கட்டிமாரு கூட்டு உரிமை முறைகள் மரபுரிமை விதிகளின் காரணமாக உள்ளன. தட்டாமரு அமைப்பின் கீழ் பிரிக்கப்படாத நிலங்களின் பல இணை உரிமையாளர்கள் வருடாந்திர சுழற்சிகளில் முழு நிலத்தையும் பயிரிடுகிறார்கள். இந்த வழியில், இணை உரிமையாளர்கள் நிலத்தை உடைமையாக்கி பயிரிடுவதில் மாறி மாறி வருகிறார்கள். கட்டிமாரு முறையில், முதலில் நிலத்தை பட்டைகளாகப் பிரித்த பிறகு, இணை உரிமையாளர்கள் வருடாந்திர சுழற்சிகளில் வெவ்வேறு பட்டைகளை பயிரிடுகிறார்கள். இருப்பினும், இந்த கூட்டு-உரிமை வடிவங்களில், கூட்டு-உரிமையாளர்களுக்கு உற்பத்தித்திறனை அதிகரிப்பதிலோ அல்லது மேம்பாடுகளைச் செய்வதிலோ இன்னும் ஆர்வம் இல்லை.

நாடு முழுவதும் நில உரிமை முறை, வாடகையை பணமாகச் செலுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை, பங்கு பயிர் செய்வதை அடிப்படையாகக் கொண்டது. நடைமுறையில் உள்ள நில உரிமை முறையின் மைய தீமையாக இருப்பது இந்த அநீதியான அமைப்புதான். இது எந்தவொரு உற்பத்தி அதிகரிப்பையும் கடுமையாகத் தடுத்தது. உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டால் நில உரிமையாளர் மேலும் மேலும் இலாபமடைவார் என்பது மட்டுமல்லாமல், எந்தவொரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் நிலத்தின் இலாபத்தை நிரூபிக்கிறது, இதன் மூலம் குத்தகைதாரரின் நிலையை ஆபத்தில் ஆழ்த்துகிறது, ஏனெனில் நில உரிமையாளர் நிலத்தை தானே பயிரிடுவதற்காக குத்தகையை புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது தனக்காக ஒரு பெரிய பங்கை பேரம் பேசலாம். பங்கு பயிர் முறைக்கு பதிலாக பணத்தை வாடகையாக மாற்றுவதற்கு எந்த அரசாங்கமும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

1958இன் நெல் நிலங்கள் சட்டம், குத்தகைதாரர்களுக்கு நிரந்தர மற்றும் பரம்பரை ஆக்கிரமிப்பு மற்றும் நிலத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு நில உரிமையைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகும். அதற்கு ஈடாக, குத்தகைதாரர் நில உரிமையாளருக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட பொருளாக வாடகையை செலுத்த வேண்டும். வாடகை ஏக்கருக்கு 15 புஷல் அல்லது பயிரின் கால் பகுதி, எது குறைவாக இருந்தாலும் அது நிர்ணயிக்கப்பட்டது. இதனால், நெல் நிலச் சட்டம் கூட பண வாடகையை அறிமுகப்படுத்தத் தவறி, பங்கு பயிர் முறையை நிலைநிறுத்தியது.

நெல் நிலச் சட்டம் குத்தகைதாரர்களுக்கு வழங்க முயன்ற நில உரிமைப் பாதுகாப்பு கூட காலப்போக்கில் மாயையாக மாறியது. குத்தகைதாரர்களை வெளியேற்றுவதைத் தடை செய்யும் சட்டம் இருந்தபோதிலும், அதன் செயல்பாட்டின் முதல் பத்து ஆண்டுகளில் சுமார் 35,000 அல்லது 12% குத்தகைதாரர்கள் வெளியேற்றப்பட்டனர். 1965 செப்டம்பர் இறுதியில் மொத்தம் 26,900 ஆக இருந்த வெளியேற்றங்கள், 1969 செப்டம்பர் மாதத்திற்குள் 37,403 ஆக அதிகரித்தன. நான்கு ஆண்டுகளில் இந்த 40% அதிகரிப்பு, மேம்பட்ட விதை வகைகள் விவசாயிகளுக்கு அளித்து வரும் அதிகரித்து வரும் விளைச்சலில் இருந்து பயனடைய, குத்தகைதாரர்களை அகற்ற வேண்டும் என்ற நில உரிமையாளர்களின் வளர்ந்து வரும் விருப்பத்தின் அடிப்படையிலானது. இது சட்டத்தின் சட்டப் பாதுகாப்புகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளின் பயனற்ற தன்மையைக் காட்டுகிறது. 37,403 வெளியேற்றங்களில், இடையீடுகளைச் செய்த அரசாங்கம் இறுதியில் 15,319 மறுசீரமைப்பு உத்தரவுகளை பிறப்பித்தது. ஆனால், உண்மையில் 6,675 மறுசீரமைப்புகள் மட்டுமே செயல்படுத்தப்பட்டன. இதனால், உரிமையாளர்கள் ஏராளமான குத்தகைதாரர்களை வெளியேற்றியது மட்டுமல்லாமல், அவர்கள் மறுசீரமைப்பு உத்தரவுகளையும் தண்டனையின்றி மீறினர்.

1958 மற்றும் 1966க்கு இடையில் நெல் நிலச் சட்டம் நான்கு முறை திருத்தப்பட்ட போதிலும், அதை செயல்படுத்துவதில் ஏற்பட்ட பல சட்ட சிக்கல்களைச் சமாளிக்க, குத்தகைதாரர்களுக்கு நிலப் பாதுகாப்பை வழங்குதல் மற்றும் வாடகையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டுப்படுத்துதல் என்ற அதன் முக்கிய நோக்கங்களை அடையத் தவறிவிட்டது. நிலப் பாதுகாப்பு தொடர்பான விதிகளின் பயனற்ற தன்மை காரணமாக, நிர்ணயிக்கப்பட்ட பங்கு தொடர்பான விதிகளும் பெரும்பாலும் செயல்படவில்லை. ஏனெனில், ஒரு குத்தகைதாரர் தனது குத்தகை குறித்து நிச்சயமற்ற நிலையில் இருக்கும்போது சட்டப்பூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட அளவை மட்டுமே செலுத்த வேண்டும் என்று வலியுறுத்த முடியாது. இதன் விளைவாக, வாடகையாக விளைபொருளின் பாரம்பரிய பாதி பங்கு தொடர்ந்து விதியாக இருந்தது. சட்டத்தின் செயல்பாடு, ஒரு கடுமையான விவசாயப் பிரச்சினைக்கு ஒட்டுவேலை தீர்வுகளின் பயனற்ற தன்மையை தெளிவாகக் காட்டுகிறது.

விவசாய வளர்ச்சிக்கான பொறுப்பு பல துறைகளுக்குரியதானது. முழு செயல்முறைக்கும் எந்த ஒரு அமைச்சும் பொறுப்பேற்கவில்லை. நிலங்கள் மற்றும் நீர்ப்பாசனத்திற்கான பொறுப்பை ஒரு அமைச்சிடமும், விவசாயம் மற்றொரு அமைச்சிடமும் ஒப்படைப்பதன் மூலம், நாட்டின் விவசாய வளர்ச்சிக்கு எந்த ஒரு அமைச்சும் முழுமையாகப் பொறுப்பேற்கவில்லை. இந்தப் பொறுப்புப் பரவல் மாவட்ட மட்டத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது, அங்கு பல்வேறு சேவைகளுக்குப் பொறுப்பான பல்வேறு துறைகளின் கீழ் வரும் ஏராளமான அரசு அதிகாரிகள், சில சமயங்களில் விவசாயிகளுக்கு முரண்பாடான ஆலோசனைகளை வழங்கினர். இவ்வாறு 1965-70 காலப்பகுதியில் விவசாயம் சீரழிந்தது.

கஞ்சா பயிர்ச்செய்கையை அனுமதிப்பது

# பொருளாதாரத்தை மேம்படுத்துமா?




முதலீட்டு வாரியத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் ஒரு திட்டமாக கஞ்சா பிர்ச்செய்கைக்கான அனுமதி 7 வெளிநாட்டு முதலீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ கடந்த செவ்வாய்க்கிழமை (12) அன்று தெரிவித்தார். இதன் நோக்கம், பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் பயிர்ச்செய்கையின் அனைத்து பகுதிகளையும் ஏற்றுமதிக்கு மட்டுமே பயன்படுத்துவதும், நாட்டிற்கு பொருளாதார நன்மைகளைப் பெறுவதும் என்பதை அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில், இந்த முடிவை இலங்கையில் செயற்படுத்த எத்தணித்திருந்தனர். எனினும், இலங்கை மருத்துவ சங்கம், இலங்கை மனநல மருத்துவர்கள் சங்கம், சமூக மருத்துவர்கள் சங்கம் மற்றும் யுனுஐஊ நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் சமூகங்களின் செல்வாக்கு காரணமாக முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

முந்தைய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திட்டத்தை செயல்படுத்த தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பது மிகவும் வருந்தத்தக்க விடயமாகவுள்ளது. இந்த திட்டத்தை ஏற்கனவே ஆட்சியில் இருந்த அரசாங்கம் இத்திட்டத்தை அமுல்படுத்த முயன்றபோது, தற்போதைய தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர், அதனை கேலி செய்து எதிர்ப்பினை தெரிவித்திருந்தமை அவரது சமூக ஊடக கணக்குகளில் காணப்பட்டது. அது போன்ற சிறந்த நிலையில் இருந்த ஒருவர், தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சரான பின்னர், இந்த திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதானது வருந்தத்தக்கது.

கஞ்சாவை சட்டப்பூர்வ பொருளாக மாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும் காணப்பட்டாலும், உலகிலாவிய ரீதியில் கஞ்சாவை சட்டப்பூர்வமாக்குவதற்கான முயற்சியானது, பொதுமக்களின் எதிர்ப்பு மற்றும் அறிஞர்களின் எதிர்ப்பால் தோல்வியடைந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

இந்த சூழ்நிலையை மாற்றுவதற்கான ஒரு நுணுக்கமாக, கஞ்சா தொழிலை 'ஜார்ஜ் சோரோஸ்' போன்ற தொழிலதிபர்களுடன் இணைந்து: ஒரு பொருளாதாரப் பொருளாக, ஏற்றுமதி வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு பொருளாக, புதிய வடிவத்தில் முன்வைப்பதன் மூலம் கஞ்சாவை சட்டரீதியாக்குவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இது கஞ்சா வியாபாரத்தின் இறுதி இலக்கை அடையப் பயன்படுத்தப்படும் ஒரு மூலோபாயத் திட்டமாகும்.
புதிய அரசாங்கம் அந்த திட்டத்தின் ஒரு தரப்பாக மாறியுள்ளது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

சர்வதேச சந்தையில் கஞ்சா அதிகமாக காணப்படுகின்றது, எனினும் சர்வதேச ரீதியாக தேவை அதிகரிக்கவில்லை, சந்தையின்
இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது. ஆகவே சர்வதேச ரீதியாக கஞ்சா சந்தை தற்போது வளர்ச்சியை நோக்கிச் செல்ல முடியாது.

பொருளாதார நன்மைகள் என்று கூறும் தவறான அறிக்கைகளின் அடிப்படையில் இதுபோன்ற முடிவுகளை எடுப்பதன் மூலம் எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மேலும் அதிகரித்து பல பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் ஒரு சூழ்நிலை ஏற்படும் என்பதை மிகுந்த வருத்தத்துடன் கூற வேண்டும். தற்போதைய அரசாங்கம் அத்தகைய முடிவை எட்டியுள்ளது ஆச்சரியமாகவும், சந்தேகமாகவும் உள்ளது. குறிப்பாக, முந்தைய அரசாங்கங்கள் எடுத்த பல நடவடிக்கைகளை விமர்சித்து தடுத்து நிறுத்தும் தற்போதைய அரசாங்கம், முந்தைய அரசாங்கங்கள் கொண்டு வந்த திட்டத்தை இவ்வளவு விரைவாக செயல்படுத்த நடவடிக்கை எடுப்பது மிகவும் வலுவான சந்தேகங்களை எழுப்புகிறது.

இந்த முடிவை செயல்படுத்தும் அதிகாரிகள் பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என்பதையும் நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

01. இலங்கையில் தற்போதும் தடைசெய்யப்பட்டுள்ள பல்வேறு போதைப்பொருட்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. இத்தகைய சூழலில், பாதுகாப்பான பயிர்ச்செய்கை எனும் பெயரில் ஆரம்பிக்க முயற்சிக்கும் கஞ்சா பயிர்ச்செய்கையானது பாதுகாப்பான வலயத்தை மீறாது என்பதற்கு என்ன உத்தரவாதத்தை அளிக்க முடியும்?

02. உலக சந்தையில் கஞ்சா பயிர்ச்செய்கை மூலம் நாடும் அரசாங்கமும் ஈட்டிய சந்தைப்படுத்தலின் அளவு, விலைகள், இலாபம் மற்றும் உண்மையான அந்நிய செலாவணியை மதிப்பிடுவதற்கு ஒரு சுயாதீனமான மற்றும் நம்பகமான சர்வதேச சந்தை ஆய்வுகள் ஏதேனும் நடாத்தப்பட்டுள்ளதா?

03. சீனா மற்றும் நெதர்லாந்து போன்ற தற்போதைய 'சட்டப்பூர்வ' கஞ்சா பயிர்செய்கையாளர்களுடன் சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்கு போதுமான திறன் நம்மிடம் உள்ளனவா அவை ஆராய்ந்து பார்க்கப்பட்டுள்ளதா?

04. இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டிலிருந்து 'சட்டப்பூர்வ' ஏற்றுமதியுடன் எளிதாக போட்டியிடுவதற்கு, ஆண்டுதோறும் மில்லியன் கணக்கான டொன் கஞ்சாவை உற்பத்தி செய்யும் தற்போதைய சர்வதேச சட்டவிரோத கஞ்சா சந்தையை நீங்கள் கருத்தில் கொண்டீர்களா?

05. எந்தவொரு பன்னாட்டு கஞ்சா நிறுவனமும் இலங்கையில் தனியாகவோ அல்லது உள்ளாட்டு பங்குதாரர்கள், அல்லது அரசாங்கத்துடனோ கஞ்சாவை பயிரிடுவதற்கான அனுமதி வழங்கப்படுமா?

06. அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய மிகவும் பொருத்தமான பணப்பயிர்கள் (உதாரணம். ஆமணக்கு, போஞ்சி - மருத்துவ ஆமணக்கு, சிட்ரஸ் போன்றவை) தொடர்பாக பரிசீலிக்கப்பட்டுள்ளதா?

07. கஞ்சா பயிர்ச்செய்கையால் ஏற்படுகின்ற அந்நிய செலாவணி நெருக்கடிகளை எந்த நாடுகள் வெற்றிகரமாகச் சமாளித்துள்ளன?

08. கஞ்சா நிறுவனங்களில் புகையிலைத் தொழில்துறை மேற்கொண்டுள்ள பாரிய முதலீடுகள் தொடர்பாக குழு கருத்தில் கொண்டதா?

## கஞ்சா பயிர்ச்செய்கை

சட்டரீதியாக்கப்படின், இந்த முடிவு எதிர்காலத்தில் நமது நாட்டின் சுகாதாரம், சமூகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மற்றும் நாட்டை பின்னோக்கி கொண்டு செல்லும் ஒரு திட்டமாகும் என்பதை இறுதியாக நாம் வலியுருத்துகின்றோம்.

மக்களின் நட்பு அரசாங்கமாக, இந்த முடிவை உடனடியாக மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட வேண்டும் என்று மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் வலியுறுத்துகிறது.

- மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம். (ADIC)

இலங்கை பிராந்திய AI மையமாக

# வளரக்கூடிய வாய்ப்பு உருவாகும்









சிவபிரகாசம் ரேனுகா

இலங்கையின் டிஜிட்டல் முன்னேற்றத்தில் புரட்சிகரமான மாற்றத்திற்கான தளத்தை அமைப்பதற்காக, 2025 செப்டெம்பர் 29,30 திகதிகளில் நடைபெறவுள்ள முதலாவது தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாட்டை அறிமுகப்படுத்தி, ஒரு புதிய யுகத்தை முன்னெடுக்கப்படவுள்ளது. ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் முன்னணி செயற்கை நுண்ணறிவு மையமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கான நாட்டின் மிகுந்த துணிச்சலான முயற்சியாக அமையவுள்ள இந்த முன்னோடியான நிகழ்வு, AI பயன்பாட்டை அனைத்து பொருளாதார துறைகளிலும் விரைவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு, செயற்கை நுண்ணறிவு சார்ந்த எதிர்கால நோக்கில் இலங்கையின் பயணத்தை முன்னெடுக்க உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான தேசிய தளமாக இருக்கும். 2025ஆம் ஆண்டில் சுமார் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்படும் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை, 2030ஆம் ஆண்டிற்குள் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களாக விரிவாக்குவது எனும் மூலோபாயக் கண்ணோட்டத்துக்கு இது நேரடி ஆதரவை வழங்குவதாக அமையும். இந்த வளர்ச்சி பாதையில், AI இன் பங்களிப்பு 10 முதல் 12 சதவீதம் வரை அமைந்திருக்கும் என கணிக்கப்பட்டுள்ளதால், இலங்கையின் பொருளாதார மாற்றத்தின் முக்கிய அடித்தளமாக AI அமையும்.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மற்றும் SLT-MOBITEL ஆகியவற்றின் வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று தரப்புக் கூட்டாண்மை, நாட்டின் தொழில்நுட்ப முன்னேற்றத்தை மேம்படுத்த அவை காண்பிக்கும் அர்ப்பணிப்பான ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. SLASSCOMஇன் பங்களிப்புடன் இந்த கைகோர்ப்புக்கு மேலும் வலிமை சேர்க்கப்பட்டுள்ளது. நிகழ்வின் Ecosystem பங்காளராக SLASSCOM இணைந்துள்ளதனூடாக, இலங்கையின் டிஜிட்டல் வெளியில் வளர்ச்சியை தூண்டுவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பு, இலங்கையின் விரிவான டிஜிட்டல் பொருளாதார இலக்குகள் மற்றும் நாட்டை பிராந்தியத் தொழில்நுட்ப முன்னோடியாக உருவாக்கும் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன், சிறப்பாக ஒத்திசைவாக உள்ளது. இதன் மூலம் அனைவரும் சமமாக பயனடையக்கூடிய உள்ளடக்கிய வளர்ச்சி, நாட்டின் ஒவ்வொரு குடிமகனையும் சென்றடைவதை உறுதிசெய்யும்.

டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு, இலங்கையின் AI சார்ந்த எதிர்காலத்திற்கான அடித்தளத்தை ஏற்படுத்தவுள்ளது. இந்த நிகழ்வு, புதுமை, பொருளாதார வளர்ச்சி மற்றும் அனைத்து குடிமக்களுக்கும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தும் ஊக்கியாக AIஐ பயன்படுத்தி, இலங்கையை டிஜிட்டல் திறன் பெற்ற நாடாக மாற்றும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. AIஐ பின்பற்றுவதன் மூலம், பொறுப்புடன் AI ஏற்றுக்கொள்வதில் மற்றும் நடைமுறைப்படுத்துவதில் பிராந்தியத்தில் முன்னணி வகிக்கும் வகையில், இலங்கையை திட்டமிட்ட முறையில் மேம்படுத்தி வருகிறோம்" என்றார். இரு நாட்கள் நடைபெறவுள்ள இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு, SLT-MOBITEL நிறுவனத்தின் ஆதரவுடன், உலகத் தரத்திலான நவீன தொழில்நுட்பங்களை உள்ளூர் தொழில் துறைகளுக்கு கொண்டு வரும். இது, இலங்கையின் தொழில்நுட்ப எதிர்காலத்தை வடிவமைக்கும் AI புத்தாக்கங்களுக்கு, வணிக நிறுவனங்கள், நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னெப்போதும் இல்லாத அளவிலான அணுகலை வழங்கும். இந்த மாநாடு, இலங்கையின் AI பயணத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பான AI ஆட்சி, நம்பிக்கை மற்றும் ஒழுக்கம், நடைமுறைப்படுத்தும் சவால்கள், வங்கித் துறை மற்றும் நிதி சேவைகள், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் போன்ற துறைகளில் துறைசார்ந்த பயன்பாடுகள் போன்ற அத்தியாவசிய தலைப்புகளை விவாதிக்கும்.

SLT-MOBITEL இன் தவிசாளர் கலாநிதி. மோதிலால் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் வழங்குனர் எனும் வகையில் SLT-MOBITEL, AIஇன் ஆற்றலை நன்கு உணர்ந்துள்ளது. நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்தை வழிநடத்துவது எமது பொறுப்பாக அமைந்துள்ளது. நாடு முழுவதிலும் ஏற்கனவே நாம் SLT-MOBITEL இன் சொந்த புத்தாக்கங்களான Hello AI மற்றும் AI Pazz போன்றவற்றினூடாக AI ஒருங்கிணைப்பை நாம் மேம்படுத்திய வண்ணமுள்ளோம். அதனூடாக, தினசரி வாழ்க்கை மற்றும் வியாபார செயற்பாடுகளை ஸ்மார்ட்டான தொழினுட்பங்கள் எவ்வாறு மேம்படுத்தும் என்பதை வெளிப்படுத்தி வருகிறோம். தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாட்டினூடாக, சகல சமூகங்களையும் சேர்ந்த ஒவ்வொரு இலங்கையருக்கும் AI புரட்சியில் பங்கேற்று அதன் பலனை அனுபவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம். இது, அனைவர் இணைந்து பயனடையும் வகையில், முழுமையாக டிஜிட்டல் மயமான மற்றும் செழிப்பான இலங்கையை உருவாக்குவதற்கான எங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க பங்களிப்பாக இருக்கும். எதிர்வரும் செப்டெம்பர் மாத நிகழ்விலும், இந்தப் பயணம் முழுதும், அனைத்து முக்கிய பங்குதாரர்களின் பங்கேற்பை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்" என்றார்.

இந்த மாநாட்டின் போது, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, இலங்கையின் பரந்த AI நோக்கத்திட்டத்தை வெளியிடுவார் என்பதுடன், தேசிய AI நிதியம் மற்றும் AI சிறப்புக்கான நிலையம் ஆகியவற்றையும் அறிமுகம் செய்வார்.

பிராந்தியத்தின் போட்டிகரமான AI மையமாக இலங்கையை திகழச் செய்யும் வகையில், இந்நிகழ்வில் கண்காட்சிகள், முக்கிய உரைகள் மற்றும் நடைமுறைப் பயிற்சிப் பணிமனைகள் அடயிருந்க்கும். உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் சிந்தனைத் தலைவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்பார்கள். அதில், Huawei நிறுவனத்தின் மத்திய கிழக்கு பிராந்தியத் தலைவர் லி ஷி, AI அடித்தளத் தீர்வுகள், தொலைத்தொடர்பு cloud மூலோபாயங்கள் மற்றும் 5ஜி ஒருங்கிணைப்பு குறித்த முக்கிய உரையை வழங்குவார். Meta நிறுவனத்தின் இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியா பிராந்திய துணைத் தலைவர் சந்தியா தேவநாதன் மற்றும் உலகளாவிய வலைப்பின்னல் நிறுவனங்களின் முகவர் கிம்-லெங் ஹோஃவு ஆகியோரின் மூலம், சமூக வலைதளங்களில் மற்றும் வணிக மாற்றத்தில் AI இன் பயன்பாடுகளை முன்னிறுத்தி அறிமுகப்படுத்தப்படும். இந்த தொழில்நுட்பசார் நிபுணர்கள் நிகழ்வில் கலந்து கொள்வதனூடாக, இலங்கையின் வணிகத் துறைக்கு உலகத் தரமான AI தொழில்நுட்பங்களை நேரடியாக அணுகும் வாய்ப்பை வழங்கி, ஆதரவளிக்கும் தளமாக அமைந்திருக்கும்.

இந்நிகழ்ச்சியில் விவசாயம், சுகாதாரம், நிதி மற்றும் வங்கி, கல்வி, உற்பத்தி, போக்குவரத்து, மின்னணு வணிகம், காப்பீடு, விருந்தினர் பராமரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை போன்ற முக்கிய துறைகளில் AI பயன்பாடுகள் விரிவாக பரிசீலிக்கப்படும். இதில் தேசிய AI கொள்கை வடிவமைப்பு, பொறுப்பான AI ஆட்சி மற்றும் நெறிமுறைகள், AI நடைமுறைச் செயல்படுத்தல் சவால்கள், திறன் வளர்ச்சி, துறைசார்ந்த பயன்பாடுகள் ஆகியவை முக்கியக் கருத்துக்களாகக் கையாளப்படும். மேலும், மொழி செயலாக்கம், பண்பாட்டு ஒத்திசைவு மற்றும் தலைமுறை இடைவெளியை நிரப்புதல் போன்ற உள்ளூர் சவால்களில் விசேட கவனம் செலுத்தப்படும். அத்துடன், சுகாதாரம், கல்வி மற்றும் பொதுச் பாதுகாப்பு போன்ற மக்கள் சேவைகளில் AI பயன்பாடு, சிறு மற்றும் நடுத்தர வர்த்தகங்கள் மற்றும் ஆரம்பநிலை நிறுவனங்களுக்கான AI விரிவாக்க தீர்வுகளும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் நவம்பர் 2025 முதுல் மே 2026 வரை முன்னெடுக்கப்படவுள்ளது. அதன் போது யாழ்ப்பாணம், அனுராதபும், கண்டி மற்றும் மாத்தறை போன்ற பிராந்திய மையங்களுக்கு விரிவாக்கப்பட்டு, நாட்டின் ஒவ்வொரு பாகத்திலும் AI அறிவை பின்பற்றும் இலக்கை எய்துவதில் பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. இது, இலங்கையின் டிஜிட்டல் மாற்றத்தில் எந்த ஒரு சமூகத்தையும் பின்வாங்க விடாமல் அரசாங்கம் முழுமையாகப் பணியாற்றும் உறுதியைக் குறிப்பிடுகிறது.

சமூகத்தின் சகல துறைகளுக்கும் டிஜிட்டல் ரீதியில் அறிவூட்டப்பட்ட வாழ்க்கைமுறையை மேம்படுத்தக்கூடிய மற்றும் செயற்படுத்தக்கூடிய தொழினுட்பத் தீர்வுகளை வெளிப்படுத்தி, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் நுண், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு ஆதரவளிக்க இந்த தேசிய AI மாநாடு எதிர்பார்க்கிறது. AI புத்தாக்க சிறப்புக்காக ஜனாதிபதி விருதுகளினூடாக கௌரவிப்பு வழங்கப்படும் நிலையில், இலங்கையின் புத்திகூர்மைத்தன்மையை கொண்டாடி, AI அப்ளிகேஷன்களின் தொடர்ச்சியாக மேம்படுத்தல்களை ஊக்குவிப்பதாகவும் அமைந்திருக்கும்.

மாநாட்டின் போது, பரந்து விரிந்த வலைப்பின்னல் வாய்ப்புகள், கல்விசார் நிறுவனங்கள், ஆரம்பநிலை நிறுவனங்கள், முன்னணி நிறுவனங்கள், உள்ளூர் புதுமையாளர்கள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தும். இதன் மூலம் இலங்கை பிராந்திய AI மையமாக வளரக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

தேசிய AI கண்காட்சி மற்றும் மாநாடு 2025 பற்றிய மேலதிக தகவல்களை AIEXPO.LK இல் பார்வையிடலாம்.

# “ஆடை உற்பத்தித்துறை சவால்களுக்கு முகங்கொடுக்கும்”



தொடக்க நாடு-அடிப்படையிலான வரி விதிப்பை (origin-based tariff) அமெரிக்கா மேற்கொள்ளுமாயின், இலங்கையின் மாபெரும் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டும் துறையான ஆடை உற்பத்தித் துறை பெருமளவு சவால்களுக்கு முகங்கொடுக்கும் என முன்னாள் இராஜதந்திரி கனா கணநாதன் குறிப்பிட்டார்.

அவ்வாறான முறைமையின் கீழ், இறுதி தயாரிப்பு எங்கு உற்பத்தி செய்யப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளாமல், அதனை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் எங்கு இருந்து வந்தன என்பதையே அடிப்படையாகக் கொண்டு வரி விதிக்கப்படும்.

தற்போதைய இறுதி உற்பத்தி மேற்கொள்ளப்படும் நாட்டின் மீது வரி விதிப்பு முறைமையை போலன்றி, தொடக்க நாடு-அடிப்படையிலான வரி விதிப்பை (origin-based tariff) மேற்கொள்ளுமாயின், இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமையும்.

சீனா மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணி வகைகளில் எமது ஆடைத் தொழிற்துறை பெரிதும் தங்கியுள்ளது. இந்த இரு நாடுகளும் தமது சில துறைகளுக்கு அமெரிக்காவின் 50% உயர் வரி விதிப்புக்கு முகங்கொடுத்துள்ளன. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளுக்கு இந்த தொடக்கநாடு அடிப்படையிலான வரி விதிக்கப்பட்டால், உள்நாட்டில் வெட்டி தைக்கப்படும் ஆடைகளுக்கும் உயர்ந்த வரி அறவிடப்படும்.

அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டுள்ள 20% வரி விதிப்பினூடாக, ஆடைத் தொழிற்துறையில் நாம் கொண்டுள்ள போட்டிகரமான அனுகூலம் பாதிப்படலாம். குறிப்பாக, எமக்கு முக்கியமான சந்தையில் இந்த பாதிப்பு நேரலாம். ஆடை வியாபாரத்தில் எல்லைகள் ஏற்கனவே கடினமானவையாக அமைந்திருக்கும் நிலையில், சடுதியாக பெருமளவு செலவு அதிகரிப்பு ஏற்பட்டால், அமெரிக்காவின் பிரதான விற்பனையாளர்களுடன் இலங்கையின் விநியோகத்தர்கள் கொண்டுள்ள ஒப்பந்தங்கள் பாதிக்கப்படலாம்.

சில நாட்களுக்கு முன் டிரம்ப் கையொப்பமிட்ட நிர்வாக உத்தரவின் படி, அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் transshipped (இடைநிலை சரக்குமாற்றம்) செய்யப்பட்டதாக சுங்கத்துறை தீர்மானித்தால், 40% வரி, அபராதம் மற்றும் தொடர்புடைய மூல நாடு வரிகள் விதிக்கப்படும். இது, எமது ஏற்றுமதியாளர்களுக்கு கூடுதல் அபாயத்தை உருவாக்கும் என கணநாதன் மேலும் குறிப்பிட்டார்.

ஏற்றுமதியாளர்களும் கொள்கை நிர்ணயிப்பவர்களும் உடனடியாகச் செயல்பட்டு, விநியோகச் சங்கிலிகளை மாற்றியமைத்து, உள்ளூர் திறனை வளர்த்து, உலகளாவிய போட்டித் திறனை வலுப்படுத்த வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார்.

இதை முன்கூட்டியே தயார் செய்ய தவறினால், கொள்கை மாற்றம் கடும் பின்னடைவை ஏற்படுத்தும். ஆனால் முன்கூட்டிய திட்டமிடல், ஒத்துழைப்பு, புதுமை ஆகியவற்றின் மூலம் இலங்கை, நெருங்கி வரும் அபாயத்தைத் தாங்கும் திறனாக மாற்றிக்கொள்ள முடியும்.

உலக வர்த்தகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கிறது; வெறும் எதிர்வினை நடவடிக்கைகள் போதாது. ஆடைத் துறையைப் பாதுகாக்க, வர்த்தக விதிகள் எங்களை பாதிக்கும் வகையில் மாறுவதற்கு முன் இலங்கை துரிதமாகச் செயல்பட வேண்டும்.

AusAsia Education உடன்

# கொமர்ஷல் வங்கி பங்குடைமை



கொமர்ஷல் வங்கி, இலங்கையில் மாணவர் கல்வி வாய்ப்பு முகவர் நிறுவனமான AusAsia Education Consultants (Pvt) Ltd. உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றில் கைச்சாத்திட்டதை தொடர்ந்து, வெளிநாடுகளில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் தற்போது கொமர்ஷல் வங்கி வழங்கும் சிறப்பு கடன் திட்டத்தின் மூலம் பயனடையும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மூலோபாய பங்குடைமையானது, மாணவர் கோப்புகளுக்கான வங்கியின் கல்விக் கடன்கள் மற்றும் வெளிநாட்டு கல்விக்கான நிதியுதவியை மேம்படுத்துவதை எளிதாக்குவதுடன், இதனால் மாணவர்கள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, கனடா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடரும்போது கவர்ச்சிகரமான விதிமுறைகளுடன் நிதி உதவியை பெற முடியும்.

AusAsia Education புகழ்பெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களின் பரந்த வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது, மேலும் அதன் வாடிக்கையாளர்கள் தற்போது கொமர்ஷல் வங்கியில் மாணவர் கோப்புகளைத் திறந்து பாடநெறி கட்டணத்தில் 75% வரை கல்விக் கடன்களுக்கு விண்ணப்பிக்கலாம், அதிகபட்சமாக ரூ.10 மில்லியன் வரை, நெகிழ்வான மீளச் செலுத்தும் விதிமுறைகள் மற்றும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சலுகைக் காலத்துடன் இக்கல்விக் கடன்கள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் ஆவணக் கட்டணங்களில் 50% கழிவு மற்றும் அவர்களின் முதல் தந்தி பரிமாற்றக் கட்டணத்தைப் பெறுவார்கள்.

இரு நிறுவனங்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கொமர்ஷல் வங்கியின் தனிநபர் வங்கியியல் உதவி பொது முகாமையாளர் கபில லியனகே மற்றும் AusAsia Education இன் முகாமைத்துவப் பணிப்பாளர் நிரோஷன் ரணவீர ஆகியோர் கையெழுத்திட்டனர்.

உலகின் முதல் 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது. தனியார் துறையின் மிகப்பாரிய கடன் வழங்குநராக விளங்கும் கொமர்ஷல் வங்கி, SME துறையினருக்கு பாரியளவில் கடனுதவி வழங்கும் கடன் வழங்குநராகவும் உள்ளது. மேலும் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் திகழும் இவ்வங்கி இலங்கையின் முதலாவது 100% காபன்-நடுநிலைமையை பேணும் வங்கியாகும். கொமர்ஷல் வங்கி நாடளாவிய ரீதியில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள கிளைகள் மற்றும் தானியங்கி இயந்திரங்களின் வலையமைப்பை செயற்படுத்தி வருகிறது.

இலங்கையின் சிறந்த வர்த்தக நாமங்களில் ஒன்றாக

# யூனியன் வங்கி தெரிவு

யூனியன் வங்கி, இலங்கையின் சிறந்த 100 மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்கள் வரிசையில் மீண்டும் தரப்படுத்தப்பட்டுள்ளது. Brand Finance இனால் Echelon Magazine உடன் இணைந்து வெளியிடப்பட்ட பிந்திய தரப்படுத்தல்களில் இந்த கௌரவிப்பு யூனியன் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. வங்கியின் உறுதியான முன்னேற்றம் மற்றும் போட்டிகரமான நிதிச் சேவைகள் துறையில் வர்த்தக நாமத்தின் வளர்ச்சியடைந்து செல்லும் நிலையை



வெளிப்படுத்துவதாக இந்த கௌரவிப்பு அமைந்துள்ளது. யூனியன் வங்கியின் நிதிசார் வினைத்திறன், சந்தை கௌரவம் மற்றும் வாடிக்கையாளர் உறவுகள் போன்றவற்றை பிரதிபலிப்பதாக இந்த தரப்படுத்தல்கள் அமைந்துள்ளன.

இந்த பெருமைக்குரிய தருணம் தொடர்பில் யூனியன் வங்கியின் சந்தைப்படுத்தல் உப தலைவர் திஷானி திசாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “வங்கியின் பெருமளவு பங்குகளை CG Corp Global மூலோபாய ரீதியில் கையகப்படுத்தியிருந்ததை தொடர்ந்து, “வாழ்வை மாற்றியமைத்தல்” எனும் வர்த்தக நாம உறுதிமொழியில் வங்கி கவனம் செலுத்துகிறது. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகள், புத்தாக்கம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கம் போன்றவற்றினால் வழிநடத்தப்படுகிறது. யூனியன் வங்கியில் தொடர்ச்சியாக நம்பிக்கை கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கிறோம். உறுதியான, எதிர்காலத்துக்கு தயாரான வர்த்தக நாமத்தை கட்டியெழுப்புவதில் எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இந்த கௌரவிப்பு பிரதிபலிக்கிறது.” என்றார்.



# பிறப்பின் பதிவுகள்

படைத்தவன் பாரினில்
பரம்பரை பெருகிட
பெற்றோர் பிணைத்திடும்
பேரின்பப் பொறியினில்
பொருந்துயிர் பெற்றுப் பிறந்தவன்
பெற்றிடும் பதிவுகள்
பலவகை
பதிந்திடும் பசைபோல்

பேதையாய்ப் பிஞ்சாய்ப்
பூத்த புதல்வனை
பூரித்த பெற்றோர்
பொன்னெனப் பாலகன்
வேண்டிய வரத்தால்
ஆண்டவன் விடையாய் வந்தவன்
வாரிசாய் வாழ்த்தி வணங்குவர்

தேடி வந்திடும்
தாய் தந்தை உறவுகள்
தரையில் தோன்றிய
தம்குலக்கொழுந்தினை
தலையும் தாளுமாய்த்
தேடித் துழாவுவர்
தாயவள் தன்களை
தீர்ந்திடக் காத்திடார்

ஆராய்ச்சி பலவிதம்
ஆணா பெண்ணதா
ஆணின் பக்கமா
அம்மா பக்கமா
பொன்னிறம் கருநிறம்
அங்கவீனங்கள்
பெற்றோர் புண்படும்
கருத்துக்கள் பலவகை

ஆண்டியென்றாலும்
அரசன் பெயர் வைப்பதும்
நொண்டியென்றாலும்
அழகன் அவனென்றும்
ஆரூடம் ஆண்டவனின் அருள்கேட்டு
அவனியிலே
அரசமனைப் பெயர்ப்பதிவு
அடையாள ஆரம்பம்

பாலகனாய்த் தீதொன்றும்
புரிந்திடாப் பிஞ்சினுக்கு
பத்திரம் பல அளிக்கும்
பல்வழியில்
முத்திரைகள் கோத்திரங்கள்
குலங்களுடன் குடும்பத்தின்
தராதரமும் தகைமை
தகுதிகளும் தராசினிலே தீர்ப்பளிக்கும்

சமுக வடிவினலே
சமயத்தின் பேரினிலே
சதிபல செய்பவர்
சாதுவாய்ப் புகுத்துவர்
பதவிகள் பட்டங்கள் பேறுகள்
பலதிலும் படைப்பின்
பலலெனப் பழியையும் போடுவர்

கடவுளருள் கருணையினால்
கல்வியெனும் கதவின்று
கண்திறந்து கற்போர்க்குக்
கைகொடுக்கும்
கூலியில்லை
கல்வியுனைக் காப்பாற்றும்
கற்றுணர்ந்தால் கோனாவாய்
கட்டாயம் கால்சுற்றிக்
குடைபிடிப்பர் குடிமக்கள்

தகுந்த இடம் தேடி
தாய்நாடு விட்டகன்று
தகுதி தராதரங்கள் தேடிநின்று
வெற்றிபெறின் தகர்ந்துவிடும்
தொக்கிநிற்கும் தாழ்ப்பாள்கள்
தீவினைகள் தனிமனிதத்
திண்மையுடன்
தலைநிமிர்ந்து திளைத்திடுவீர்..!



கலாநிதி மு.ந.சிவச்செல்வன்
ஆக்லாந்து, நியூ சிலாந்து

# ஏனோ..!




முத்தமிட்ட
கைகள் முழுதாய்
மாறும் முன்
ஏனோ
முடிவுகளை அறிவித்தீர்..!

முத்தமிட்ட
கைகளில் பட்டு தெறித்த
சுடு சுவாசம்
மாறும் முன்
ஏனோ
முனங்கள்களை தெரிவித்தீர்..!

முத்தமிட்ட
கைகளை தொட்டுணரும்
உரசல் மாறும் முன்
ஏனோ !
மூர்க்கமாயினீர்..!

முத்தமிட்ட
கைகளை
நிழல்கள் நம்பும் முன்
நீர்த்துப்போக
ஏனோ
நினைத்தீர்..!


முத்தமிட்ட
கைகள்
கண்கள் பதிக்க
முன் வாழ்வொளியை
ஏனோ
கரைத்தனீர்..!

முத்தமிட்ட
கைகள்
கரம் அனைத்து
சில தருணங்களில்
கரை
படிந்ததேனோ!

முத்தமிட்ட
உதடுகள்
சமாதான சுவாசத்தை தரிசிக்க
உங்கள் கரங்களில்
ஆயிரம் கயமைகள் கொண்டு
உயிர் குடிக்கும் பிசாசுகளே!
மானுடத்தின் பெயரால்
உங்கள் முடிவு காலம் நெருங்குகிறது!

சோலை சுப்ரா





# உலக அரங்கே ...

உங்கள் மௌனம் எங்கள்
மானுடத்தை
அசைத்துப் பார்க்கிறது..!

உங்கள் சாந்தம் எங்கள்
சந்ததியின்
எதிர்காலத்தை வினா
ஆக்குகிறது..!

உங்கள் கவனம் எங்கள்
கனவு உலகத்தை
கரைபடிய
வைக்கிறது..!

உங்கள் பொறுமை எங்கள்
நிகழ் காலத்தை
தகர்க்கிறது..!

உங்கள் சகிப்பு
எங்கள்
சத்தியத்தின்
பாதையை
அகலமாக்குகிறது..!

உங்கள் சரணாகதி எங்கள்
சந்தர்ப்பங்கள்
எல்லாவற்றையும்
சந்தேகிக்கின்றது..!

உங்கள் சரசம்
எங்கள்
குழந்தைகளின்
எதிர்காலத்தை..!
நிற்கதியாகுகிறது

உங்கள் சல்லாபம் எங்கள்
நிலத்தினை
சிறுக சிறுக
வேரறுக்கின்றது

உங்கள் கவனம் எங்கள்
கால வெள்ளத்தை
காட்டாறாக
மாற்றுகிறது

சோலை சுப்ரா





# அலையும் அலைகளும் அலையடிக்கும் சர்ச்சைகளும்



தி.டிலக்சன்,
அரசறிவியல் துறை,
3ஆம் வருடம்,
யாழ். பலகலைகழகம்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு கடற்கரை கிராமமான அறுகம்பே அமைதியான சூழலுக்கும், மனதைக் கொள்ளைகொள்ளும் இயற்கை அழகுக்கும் பெயர் பெற்றது. குறிப்பாக உலகத் தரம் வாய்ந்த அதன் அலைகள் நீரலைச் சறுக்கு வீரர்களின் சொர்க்கமாக இத்தீவை உலக வரைபடத்தில் நிலைநிறுத்தியுள்ளது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இந்த அமைதிச் சொர்க்கம் வெளிப்படையாகத் தெரியாத பல உள்நாட்டு வெளிநாட்டுச் சர்ச்சைகளின் மையமாக மாறியுள்ளது. கடல் அலைகளுடன் ஒரு புதிய அலை, சர்ச்சைகளின் அலை, இங்கு ஆர்ப்பரிக்கத் தொடங்கியுள்ளது.

அறுகம்பே நீண்ட காலமாக சுற்றுலாப் பயணிகளின் விருப்பமான இடமாக இருந்து வருகிறது. அதன் பொருளாதாரம் பெரும்பாலும் சுற்றுலாத்துறையை நம்பியே உள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு தங்கி கடற்கரை வாழ்க்கையை அனுபவித்து இப்பகுதியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். ஆனால், அண்மைக் காலமாக இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் கணிசமான அளவில் இஸ்ரேலியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதுவே பல சர்ச்சைகளின் தொடக்கமாக அமைந்தது.

அறுகம்பையில் இஸ்ரேலியர்கள் பல தங்குமிடங்களையும், உணவகங்களையும், மற்ற வர்த்தக நிறுவனங்களையும் நடத்தி வருகின்றனர். அவர்கள் சுற்றுலாப் பயணிகளாக மட்டும் இல்லாமல், இப்பகுதியின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் மாறியுள்ளனர். இது, உள்ளூர் மக்கள் மத்தியில் ஒருவித அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

### யூதர்களின் புகலிடமா மாறுகின்றதா அறுகம்பே?

அறுகம்பே குறித்து நிலவும் பெரிய கேள்வி இது இஸ்ரேலியர்களுக்காக ஒரு புதிய புகலிடமாக மாறி வருகிறதா? என்பதே. இதற்கான முக்கிய ஆதாரங்களில் ஒன்று இங்கு இயங்கி வரும் ஒரு 'யூத மத்திய நிலையம்' ஆகும். இந்த நிலையம் யூத சுற்றுலாப் பயணிகளுக்கு ஆன்மிக மற்றும் சமூக சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு புறம் யூத சமூகத்தினருக்கு உதவினாலும் மறுபுறம் அறுகம்பேயில் ஒரு நிரந்தர யூத சமூகம் உருவாகி வருவதற்கான அறிகுறியாக இது பார்க்கப்படுகிறது. இந்த நிலையம் அறுகம்பேயின் அமைதியான கலாச்சார அமைப்பில் ஒரு அந்நிய உறுப்பாகக் கருதப்படுவதால் உள்ளூர் மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

### நில அபகரிப்பு மற்றும் பொருளாதார ஆதிக்கமா?

இஸ்ரேலியர்களின் வருகை வெறும் சுற்றுலா நடவடிக்கையாக மட்டும் இல்லாமல் பொருளாதார ஆதிக்கமாகவும் மாறியுள்ளது. அதிக விலை கொடுத்து நிலங்களை வாங்குவது குறிப்பாக, கடற்கரைக்கு அருகில் உள்ள நிலங்களை வாங்குவது போன்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இது உள்ளூர் நிலங்களின் விலையை உயர்த்தி உள்ளூர் மக்கள் நிலத்தை வாங்குவதையோ அல்லது சொந்த வணிகத்தை நடத்துவதையோ கடினமாக்குகிறது. சில சமயங்களில் சட்டவிரோதமாக நிலங்களை ஆக்கிரமிக்கும் முயற்சிகளும் நடப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது அறுகம்பேயின் பாரம்பரிய சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பைச் சீர்குலைப்பதாக உள்ளது.

> **அறுகம்பே அதன் இயற்கையான அமைதியையும், கலாசார அடையாளத்தையும் இழந்து வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு புதிய பகுதியாக மாறிவிடும். அறுகம்பேயில் எழும் இந்த சர்ச்சைகளின் அலைகள் ஒரு நாள் அதன் அமைதியான கரையையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையையும் முழுமையாக விழுங்கிவிடும் அபாயம் உள்ளது**

மீனவர்கள் மற்றும் சிறு வியாபாரிகளின் வாழ்வாதாரம் இதனால் நேரடியாகப் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

### பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்படுமா?

அறுகம்பேயில் இஸ்ரேலியர்களின் இருப்பு ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து சர்வதேச அளவில் இஸ்ரேலியர்கள் இலக்கு வைக்கப்படலாம் என்ற எச்சரிக்கைகள் அதிகரித்துள்ளன. இதனால் அறுகம்பையில் உள்ள இஸ்ரேலியர்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. அண்மையில் இதுபோன்ற தாக்குதல் குறித்த உளவுத் தகவல்கள் கிடைத்ததையடுத்து அறுகம்பே பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்த நிலைமை இப்பகுதியின் சுற்றுலாச் சூழலை மேலும் சிக்கலாக்குகிறது. அமைதியான ஒரு சுற்றுலாத் தலத்திற்கு இது ஒரு புதிய பாதுகாப்புச் சவாலாக உருவெடுத்துள்ளது.


### அரசியல் மற்றும் இராஜதந்திரத்தில் தாக்கம் ஏற்படுமா?

இந்த விவகாரங்கள் இலங்கையின் அரசியல் மற்றும் இராஜதந்திர மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சில அரசியல் தலைவர்கள் இந்த விவகாரம் குறித்து அரசாங்கத்திடம் கேள்விகளை எழுப்பியுள்ளதோடு, இது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாகவும் பார்க்கப்படுகிறது. அதேபோல, பலஸ்தீன ஆதரவு நிலைப்பாட்டைப் பாரம்பரியமாக எடுத்து வரும் இலங்கையில் இஸ்ரேலியர்களின் இத்தகைய ஆதிக்கம் நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒரு சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சமும் நிலவுகிறது. இவர்கள் அறுகம்பையில் கொஞ்சம் கொஞ்சமாகக் குடியேறி இலங்கையை அவர்கள் தங்களினுடைய காலணித்துவத்தின் கீழ் கொண்டுவர வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றன.

அறுகம்பையின் எதிர்காலத்தை பார்க்கும் போது, அறுகம்பே தற்போது ஒரு இக்கட்டான நிலையில் உள்ளது. ஒருபுறம் சுற்றுலா வளர்ச்சி மூலம் பொருளாதார பலத்தை ஈட்ட வேண்டும் என்ற நோக்கம் உள்ளது. மறுபுறம் வெளிநாட்டவர்களின் ஆதிக்கம், நில அபகரிப்பு, கலாச்சார மாற்றங்கள், மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் போன்ற பிரச்சினைகள் தலைதூக்குகின்றன.

அறுகம்பேயின் எதிர்காலம் இலங்கை அரசாங்கம் இந்த பிரச்சினைகளை எவ்வாறு கையாள்கிறது என்பதைப் பொறுத்தது. சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் அதே நேரத்தில், உள்ளூர் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதி செய்வது மிக முக்கியம். இல்லையென்றால், அறுகம்பே அதன் இயற்கையான அமைதியையும், கலாசார அடையாளத்தையும் இழந்து வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு புதிய பகுதியாக மாறிவிடும். அறுகம்பேயில் எழும் இந்த சர்ச்சைகளின் அலைகள் ஒரு நாள் அதன் அமைதியான கரையையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கையையும் முழுமையாக விழுங்கிவிடும் அபாயம் உள்ளது.

# ஓர் ஆபத்தான மனநிலை





வி.ஜெபநிஷா,
உளவளத் துணை மாணவி,
தேசிய சமூக அபிவிருத்தி நிர்வகம்.

தன்னுயிரை மாய்த்தல் (Suicide) என்பது, ஒரு நபர் உன்னத மன அழுத்தம், பெரும் வலியுணர்வு அல்லது பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியாத நேரத்தில், தன்னைத்தானே காயப்படுத்தி உயிரை இல்லாமல் செய்யும் செயல் ஆகும். இது தற்காலிகமான பிரச்சனைகளுக்கான நிரந்தர தீர்வாகும் என நினைக்கப்படும் ஓர் ஆபத்தான மனநிலை.

அந்தவகையில் இன்றைய சமூகத்தில் இளம் தலைமுறையினர் பல எதிர்ப்புகள் போட்டிகள் எதிர்பார்ப்புகள் மற்றும் தொழில்நுட்ப அடிக்கடி மாறும் சூழ்நிலைகளில் வாழ்கின்றனர். இதனால் அவர்கள் மீது உருவாகும் மன அழுத்தம் அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் மனநலத்தையும் பாதிப்பதோடு தவறான முடிவுக்கு செல்வதற்கு தள்ளுகின்றது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நெருக்கடிகள் சுமைகள் என்பவற்றால் இவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இவ்வாறு நெருக்கடி மன அழுத்தத்தில் இருப்பவர்களுக்கும் உளவள துணை இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. அத்தோடு அவர்களது நெருக்கடி தன்மையைக் குறைக்க உதவுகின்றது.

இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு மன அழுத்தத்தைப் பல விடயங்கள் தூண்டுகின்றன. அதாவது கல்வியில் ஏற்படும் பிரச்சினைகள், தொழில்நுட்பத்தினால் உருவாகும் ஒப்பீடு, வேலைவாய்ப்பு, பிரச்சினைகள் மற்றும் இன்றைய காலத்தில் அதிகமாக காதலினால் ஏமாற்றப்பட்டு மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாக தங்கள் வாழ்க்கையில் இனி முடிவும் மரணம் தான் என்று பலர் தவறான முடிவுக்குத் தள்ளப்படுகின்றனர்.

அந்த வகையில் இளம் சமூகத்தினருக்கு கல்வியில் ஏற்படும் பிரச்சனைகளை ஆராய்ந்து பார்த்தால் தேர்வு, மதிப்பெண் என்பவற்றால் தன்மானம் குறைதல் என்று மனந்தளர்ந்து மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர், மற்றும் தொழில் நுப்பத்தினால் ஏற்படும் ஒப்பீடு அதாவது இன்று இளம் சமூகத்தினர் கூடுதலாக சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றனர். இதனால் மற்றவர்களின் நிகரற்ற தருணங்களைப் பார்க்கும்போது, ஏற்றத்தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் உள நெருக்கிட்டுக்கு உள்ளாகின்றனர்.

இன்றைய நவீன காலத்தில் எமது நாட்டில் வேலை வாய்ப்பு பிரச்சனை என்பது மேல் ஓங்கிக் காணப்படுகிறது. அதாவது, கல்வி கற்றும் தகுதியான வேலை கிடைக்காமை, தகுதியான ஊதியம் கிடைக்காமை போன்ற காரணங்களினால் எதிர்கால சந்ததியினர் தமது எதிர்காலத்தைக் குறித்து பயத்தோடு வாழ்ந்து மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர்.

நாளுக்கு நாள் மாற்றம் அடைந்து வரும் உலகில் இளம் சமூகத்தினருக்கு ஏற்படும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாகக் காதல் காணப்படுகிறது. உறவுகள் பிரிவுக்குள்ளாகின்ற போது, பல இளம் சமுதாயத்தினர் நம்பிக்கை இழந்து மன உளைச்சலுக்கு உள்ளாகி மரணம் தான் முடிவென்று தவறான முடிவுக்கு செல்கின்றனர்.


> **பிரச்சினைக்கு முடிவு தன்னுயிரை மாய்த்தல் அல்ல, தன்னுயிரை மாய்த்தல் என்பது ஒரு தீர்வு அல்ல. அது தற்காலிகமான பிரச்சனையின் தீர்வை தேர்ந்தெடுப்பது என்பது மிகப்பெரிய தவறு என்று உலகளத்தனையாளர் சுட்டிக்காட்டுவார்**

மேல் கூறப்பட்ட பிரச்சினைகளினால் இளம் சமுதாயத்தினர் தூக்கமின்மை, மனச்சோர்வு, உண்ணாமல் இருத்தல், சமூக விலகல், நம்பிக்கை இழத்தல், போதை பழக்கம், மனநல சிக்கல், போன்ற செயல்பாட்டுக்கு அடிமையாகின்றனர் .இதன் இறுதித் தருணமாக எல்லாப் பிரச்சினைக்கும் முடிவு தன்னுயிரை மாய்த்தல் என்ற தவறான துப்பாக்கிய நிலைக்கு இளம் சமூகத்தினர் செல்கின்றனர்.

இந்த நிலையில், இவ்வாறான பிரச்சினைக்கு ஒருவரை நாடுவதன் மூலம் உணர்வுகளை பகிர்வதற்கான பாதுகாப்பான சூழல், தன்னம்பிக்கை வளர்க்கும் வழிமுறைகளான வேலை வாய்ப்பு, காதல் தோல்வி, போன்ற தீவிர மன வேதனைகளை சமாளிக்கு ஆற்றல், வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்து கொள்ளும் ஆற்றல் கிடைக்கின்றது.

இவ்வாறான பிரச்சினைக்கு முடிவு தன்னுயிரை மாய்த்தல் அல்ல, தன்னுயிரை மாய்த்தல் என்பது ஒரு தீர்வு அல்ல. அது தற்காலிகமான பிரச்சனையின் தீர்வை தேர்ந்தெடுப்பது என்பது மிகப்பெரிய தவறு என்று உலகளத்தனையாளர் சுட்டிக்காட்டுவார். ஆகவே வேலை, காதல், கல்வி இவ்வாறான பிரச்சனைகள் எல்லாம் வாழ்க்கையின் ஒரு பகுதிதான், அது வாழ்க்கையை பூரணப்படுத்தாது.

ஆகவே, தன்னுயிரை மாய்த்தல் என்பது பிரச்சினைக்கு முடிவல்ல.



புதுடெல்லி

# இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினம் இன்று

## செங்கோட்டையில் உச்சக்கட்ட பாதுகாப்பு

### கொடியேற்றி வைத்து உரையாற்றுவார் பிரதமர் மோடி

இந்தியாவில் 79ஆவது சுதந்திர தின விழா இன்று வெள்ளிக்கிழமை (15) கொண்டாடப்படுகிறது.

தலைநகர் புதுடெல்லியில், வரலாற்று சிறப்புமிக்க செங்கோட்டையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் காலை 7.30 மணிக்கு பிரதமர் நரேந்திர மோடி கொடியேற்றி வைக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் பொலிஸ் பணியாளர்கள் குழுமியுள்ள பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, தேசியக்கொடியை ஏற்றி வைக்கிறார். அப்போது வழக்கமான சம்பிரதாயப்படி 21 துப்பாக்கி குண்டுகள் முழங்கும். அதனைத்தொடர்ந்து அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.

இந்த விழாவை முன்னிட்டு செங்கோட்டையின் முழு கட்டுப்பாடும் பொலிஸ் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது.

செங்கோட்டையைச் சுற்றிலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த பகுதியில் டிரோன்கள் பறக்க முடியாது. சிறுவர்கள் காற்றாடிகள் (பட்டம்) விட முடியாது. இதைப்போல ராட்சத பலூன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

டெல்லிக்குள் தேவையில்லாத போக்குவரத்து நெரிசல் மற்றும் எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்பட்டு விடக்கூடாது என கருதி வணிக நோக்கத்துக்காக இயங்கும் வாகனங்களின் நுழைவுக்கு வியாழக்கிழமை (14) இரவு முதல் தடை விதிக்கப்பட்டது. பஸ் நிலையங்கள், ரெயில் நிலையங்கள் மற்றும் பொது



இடங்களை கண்காணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு பணிகளுக்காக டெல்லி மாநகரம் முழுவதும் 10 ஆயிரம் பொலிஸார் நியமிக்கப்படுகிறார்கள். போக்குவரத்து பணிகளுக்காக 3 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

இது தவிர மத்திய ஆயுதப்படையினர் உள்ளிட்ட துணை ராணுவப்படையினர் சுமார் 2 ஆயிரம் பேர் செங்கோட்டை மற்றும் பிற இடங்களில் பணியமர்த்தப்படுகிறார்கள். மொத்தம் 15 ஆயிரம் பொலிஸ் பணியாளர்கள் பல பிரிவுகளாக பாதுகாப்பை மேற்கொள்ள இருக்கிறார்கள்.

பாதுகாப்பின் ஒரு அம்சமாக புதுடெல்லி விமான நிலையத்தில், பட்டியலிடப்படாத விமானங்களுக்கு காலையிலும், மாலையிலும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. விமான நிலையம் முழுவதிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருக்கிறது.

புனே

### உயிருக்கு அச்சுறுத்தல்:

## ராகுல் மனு தாக்கல்



காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கடந்த 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டன் நிகழ்ச்சியில் பேசும்போது, "ஒரு முறை நண்பர்கள் சிலருடன் சேர்ந்து ஒரு முஸ்லிமை தாக்கினோம். அது மகிழ்ச்சியாக இருந்தது என சாவர்க்கர் நூலில் குறிப்பிட்டுள்ளார்" என்றார்.


அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சாவர்க்கர் வம்சாவளியைச் சேர்ந்த சத்யாகி சாவர்க்கர் என்பவர் ராகுல் காந்தி மீது புனே நகரில் உள்ள எம்.பி., எம்.எல்.ஏக்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இந்நிலையில், "மனுதாரர் நாதுராம் கோட்சேவின் வம்சாவளி ஆவார். எனவே, மனுதாரரால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. எனக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்" என கூறி புனே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

வொஷிங்டன்

### அமைதிக்கு இணங்காவிட்டால்

## கடும் விளைவுகளை ரஷ்யா சந்திக்கும்



உக்ரேனுடன் அமைதி உடன்பாட்டைச் செய்ய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒப்புக்கொள்ள மறுத்தால் கடுமையான பின்விளைவுகளைச் எதிர்கொள்ளக்கூடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.


இன்று வெள்ளிக்கிழமை(15) அலாஸ்காவில் புட்டினுடன் நடைபெறவிருக்கும் சந்திப்பு பலன் தரவில்லை என்றால், பொருளியல் தடைகள் விதிக்கப்படலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ட்ரம்ப், ஐரோப்பியத் தலைவர்கள், உக்ரேனிய ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி ஆகியோரிடையே புதன்கிழமை (13) அன்று இணையம்வழி கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. அதன் முடிவில் ட்ரம்ப் கூறிய கருத்து உக்ரேனுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

எனினும், உக்ரேன், ஐரோப்பா ஆகியவற்றின் உறுதியான வேண்டுகோள்களை ரஷ்யா பெரும்பாலும் நிராகரிக்கக்கூடும். கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் முன்வைத்த அதன் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று ரஷ்யா இதற்குமுன் கூறியது.

இன்று 15ஆம் திகதி சந்திப்புக்குப் பின்னர் போரை நிறுத்த புட்டின் சம்மதிக்காவிட்டால் ரஷ்யா பின்விளைவுகளைச் சந்திக்குமா என்ற கேள்வி, "ஆம், அது சந்திக்கும்?" என்று ட்ரம்ப் பதிலளித்துள்ளார்.

அந்தப் பின்விளைவுகள் தடைகளா? அல்லது வரிகளா? என்ற கேள்விக்கு, "நான் அதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால், கடுமையான பின்விளைவுகள் இருக்கும்" என்றார்.



### தாய்வானை உலுக்கிய 'போடூல்':

## 13 பேர் மரணம்; 10,000 பேர் வெளியேற்றம்

### 400 விமானங்கள் இரத்து

கிழக்கு சீனக்கடலை மையமாக கொண்டு உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை புயலாக வலு கொண்டது. இந்த புயலுக்கு 'போடூல்' என தாய்வான் பெயரிட்ட நிலையில், தென்கிழக்கு கரையோரம் கரையை கடக்கும் என கணிக்கப்பட்டது. புதன்கிழமை(13) அன்று போடூல் புயல் உள்ளூர் நேரப்படி மதியம் 2 மணியளவில் கரையை கடந்தது. மணிக்கு 120 கி.மீ வேகத்தில் பலத்த காற்றுடன் அங்குள்ள கடற்கரை மாகாணங்களான தைதுங், ஹுவாலியன், பிங்டுங், யூன்லின் ஆகியவற்றை தாக்கியது.

இதனால் அங்குள்ள நகரங்கள் சூறைக்காற்றுக்கு சிக்கி சின்னாபின்னமானது. புயல் காரணமாக இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது. 8 செ.மீ. அளவில் கனமழை பெய்ததால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. புயலில் சிக்கி மின்கம்பங்கள், மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாய்வானில் இருந்து ஜப்பான், சீனா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு இயக்கப்பட இருந்த 130 சர்வதேச விமானங்களும், 300 உள்நாட்டு விமானங்களும் செய்யப்பட்டது.

மேலும் பாடசாலை, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளன.

கடலோர பகுதிகளில் வசித்து வந்த 10,000 பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த புயலில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர். புயல் காரணமாக ஹாங்காங் மற்றும் பிலிப்பைன்சிலும் கனமழை கொட்டியதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.




### சுப்பர் கிண்ணம்: பெனால்டியில் டொட்டென்ஹாமை வென்று

# கிண்ணத்தைக் கைப்பற்றிய பரிஸ் ஸா ஜெர்மைன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சுப்பர் கிண்ணப் போட்டியில் சம்பியன்ஸ் லீக் தொடரின் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இத்தாலியில் வியாழக்கிழமை(14) அதிகாலை நடைபெற்ற யூரோப்பா லீக் தொடரின் சம்பியன்களான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியில் பெனால்டியில் வென்றே பரிஸ் ஸா ஜெர்மைன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இப்போட்டி வழமையான நேரத்தில் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது. பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக லீ கங்-இன், கொன்கலோ றாமோஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் சார்பாக மிக்கி வான் டு வென், கிறிஸ்டியன் றொமெரோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பெனால்டியில் பரிஸ் ஸா ஜெர்மைனின் வித்தின்ஹா தனதுதையை கோல் கம்பத்துக்கு வெளியே செலுத்திய நிலையில், கொன்கலோ றாமோஸ், உஸ்மன் டெம்பிலி, லீ கங்-இன், நுனோ மென்டிஸ் ஆகியோர் தமதுதைகளை உட்செலுத்தியருந்தனர். டொட்டென்ஹாமின் டொமினிக் சொலங்கே, றொட்றிகோ பென்டாக்கூர், பெட்ரோ பொரேரோ ஆகியோர் தமதுதைகளை உட்செலுத்தியிருந்த நிலையில், மிக்கி வான் டு வென்னின் உதையை பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளர் லூகாஸ் செவலியர் தடுத்திருந்ததுடன், மத்தியிஸ் டெல் தனதுதையை கோல் கம்பத்துக்கு வெளியே செலுத்த 4-3 என்ற ரீதியில் பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது.

## தென்னாபிரிக்கத் தொடரிலிருந்து ஓவன் விலகல்



தென்னாபிரிக்காவுக்கெதிரான இறுதி இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியிலிருந்தும், ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலிருந்தும் அவுஸ்திரேலியாவின் மிற்செல் ஓவன் விலகியுள்ளார்.

ககிஸோ றபாடா வீசிய பந்தானது இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் ஓவனின் தலைக்கவசத்தில் தாக்கியதால் ஏற்பட்ட அதிர்ச்சியாலேயே மேற்கூறப்பட்ட போட்டிகளிலிருந்து ஓவன் விலகியுள்ளார்.

களச் சோதனையின்போது ஓவன் தேறியிருந்தபோதும், ஆட்டமிழந்த பின்னர் தலைச்சுற்று சமிக்ஞைகளை ஓவன் காண்பித்ததாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை ஒருநாள் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் லான்ஸ் மொரிஸ், துடுப்பாட்டவீரர் மற் ஷோர்ட்டை சகலதுறைவீரர் ஆரோன் ஹார்டி, இடதுகை சுழற்பந்துவீச்சாளர் மற் கூனுமென் ஆகியோர் பிரதியிட்டுள்ளனர். ஷோர்ட்டுக்குப் பதிலாக ஹார்டி ஏற்கெனவே இருபதுக்கு-20 குழாமில் காணப்படுகிறாரென்பது குறிப்பிடத்தக்கது.

மொரிஸ் முதுகுப் பகுதியில் வலி இருப்பதாக தெரிவித்ததுடன், ஷோர்ட் காயத்திலிருந்து இன்னும் குணமடையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

## மூன்றாமிடத்துக்கு முன்னேறிய மற் ஹென்றி

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு நியூசிலாந்தின் மற் ஹென்றி முன்னேறியுள்ளார்.

சிம்பாப்வேக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஹென்றி, நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை,
1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா,
3.மற் ஹென்றி, 4.பற் கமின்ஸ்,
5.ஜொஷ் ஹேசில்வூட், 6.நொமன் அலி,
7.ஸ்கொட் போலண்ட், 8.நேதன் லையன்,
9.மார்கோ ஜன்சன், 10.மிற்செல் ஸ்டார்க்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.ஜோ றூட், 2.ஹரி ப்றூக், 3.கேன் வில்லியம்சன்,
4.ஸ்டீவ் ஸ்மித், 5.யஷஸ்வி ஜைஸ்வால்,
6.தெம்பா பவுமா, 7.கமிந்து மென்டிஸ்,
8.றிஷப் பண்ட், 9.டரைல் மிற்செல்,
10.பென் டக்கெட்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ்,
3.பென் ஸ்டோக்ஸ், 4.வியான் முல்டர்,
5.பற் கமின்ஸ்.

தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலிரண்டு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 133 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் டிம் டேவிட், துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் 16ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி 10ஆம் இடத்தை அடைந்துள்ளார்.



முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.அபிஷேக் ஷர்மா, 2.திலக் வர்மா,
3.பில் ஸோல்ட், 4.ட்ரெவிஸ் ஹெட்,
5.ஜொஸ் பட்லர், 6.சூரியகுமார் யாதவ்,
7.பதும் நிஸங்க, 8.டிம் செய்ஃபேர்ட்,
9.ஜொஷ் இங்லிஸ், 10.டிம் டேவிட்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜேக்கப் டஃபி, 2.அடில் ரஷீட்,
3.அகீல் ஹொஸைன், 4.வருண் சக்கரவர்த்தி,
5.அடம் ஸாம்பா, 6.வனிது ஹசரங்க,
7.ரவி பிஷ்னோய், 8.ரஷீட் கான், 9.அர்ஷ்டீப் சிங்க்,
10. மகேஷ் தீக்‌ஷன.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங் ஐரீ,
3.மொஹமட் நபி, 4.றொஸ்டன் சேஸ்,
5.லியம் லிவிங்ஸ்டோன்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 15, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.